விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 160 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 14 சனிக்கிழமை (28.05.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=



## வீரவன்ஸ மனைவிக்கு
### இரு வருட சிறை



03ஆம் பக்கம் பார்க்க

## கோட்டாபய - ரணில் அரசின் நாடகமே 21ஆவது திருத்தம்
### பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல

(கொழும்பு)

அரசமைப்பின் 21ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் கோட்டாபய - ரணில் தலைமையிலான அரசால் நாடகம் அரங்கேற்றப்படுகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது,

"19 பிளஸ் என்பதே 21ஆவது திருத்தச் சட்டமூலமாக வருகின்றது என ஆளுங்கட்சி கூறியது.

ஆனால், 19 மைனஸ்தான் முன்வைக்கப்பட்டுள்ளது. 19 இல் இருந்த முக்கிய 15

## சீனி விலை ரூ.300 ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

ஒரு கிலோ சீனியின் விலை 300 ரூபாயாக அதிகரித்துள்ளது.

அத்தியாவசியப் பொருட்களின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துவரும் நிலையில் சீனியின் விலையும் அதிகரித்துள்ளது. 15

### கவனிப்பாரற்ற நிலையில்
## வட்டுக்கோட்டையில் இரு வயோதிப பெண்கள்
### சடலங்களாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவில் உள்ள வீடொன்றில் இரு சகோதரிகளான வயோதிபப் பெண்கள் இருவரின் சடலங்கள் கண்டறியப்பட்டன.

மாவடி, சங்கரத்தை என்ற இடத்தில் 15

### சகலரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய
# கொள்கையை அமுலாக்கினாலேயே
### சர்வதேச உதவியை பெறமுடியும்
### பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

**பொருளாதார மீட்சிக்காக சகல தரப்பினரும் ஏற்றுக்கொள்ளும் கொள்கைத் திட்டத்தை செயற்படுத்தினால் சர்வதேச நாடுகளினதும் சர்வதேச நிதி நிறுவனங்களினதும் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள முடியும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

தற்போதைய பொருளாதார நிலைமை தொடர்பில் விசேட காணொளியை வெளியிட்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பொரு 15



## அமெரிக்கத் தூதுவருடன் சபாநாயகர் சந்திப்பு
### நெருக்கடி தொடர்பில் ஆராய்வு



15

## அரச ஊழியர்களுக்கு சம்பளத்தை அதிகரிக்கும் தீர்மானம் இல்லை
### சுகாதாரம், கல்வியைத் தவிர ஏனைய அமைச்சுக்கான ஒதுக்கீட்டையும் குறைக்க நடவடிக்கை

(கொழும்பு)

இடைக்கால வரவு-செலவு திட்டத்தின் ஊடாக அரச ஊழியர்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்படவுள்ளதாக ஊடகங்கள் சிலவற்றில் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில் அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பை மேற்கொள்ள பிரதமர் எவ்வித தீர்மானத்தையும் எடுக்கவில்லை என பிரதமர் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதேபோல், இடைக்கால வரவு - செலவு 15

### டெங்குக் காய்ச்சலால்
## உடுவிலில் 5 வயது சிறுமி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

டெங்குக் காய்ச்சல் காரணமாக ஐந்து வயதுச் சிறுமியொருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்.உடுவிலைச் சேர்ந்த பரசுதன் யோயிதா என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த சிறுமிக்கு கடந்த 23 ஆம் திகதி மாலை காய்ச்சல் இருந்துள் 15

## 21ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில்
### கட்சித் தலைவர்களுடன் பிரதமர் கலந்துரையாடல்



15

## ஐக்கிய மக்கள் சக்திக்குள் உட்கட்சி மோதல் உக்கிரம்
### சஜித் மீதும் கடும் அதிருப்தி
### கட்சி இரண்டாக உடையும் வாய்ப்பு

(கொழும்பு)

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்குள் உட்கட்சி மோதல் உக்கிரமடைய ஆரம்பித்துள்ளது எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

பிரதமர் பதவியை சஜித் பிரேமதாஸ ஏற்காததால் அதிருப்தியடைந்த ஹரின் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார ஆகியோர் கட்சியிலிருந்து விலகி, அரசுடன் இணைந்து 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வவுனியாவில் கறுப்புச் சந்தையில்
# ரூ. 15 ஆயிரத்திற்கு சமையல் எரிவாயு

(வவுனியா)

வவுனியாவில் சமையல் எரிவாயு கறுப்புச் சந்தைகளில் 15 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வருவதாக பொது மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

வவுனியா மாவட்டத்திற்கு என அனுப்பப்படுகின்ற சமையல் எரிவாயுவை (காஸ்) பதுக்கும் சில விற்பனை முகவர்கள் அதனை வேறு இடங்களில் களஞ்சியப்படுத்தி விட்டு முச்சக்கர வண்டி ஓட்டுனர்கள் சிலரின் துணையுடன் 15 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்து வருகின்றனர்.

12.5 கிலோ சமையல் எரிவாயுவே இவ்வாறு 15 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றது. இதனால் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் சாதாரண மக்கள் பலரும் சமையல் எரிவாயுவை பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் இருப்பதுடன், இது தொடர்பில் பாவனையாளர் அதிகார சபையினர் கூட கவனம் செலுத்தவில்லை எனவும் பொது மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (ம-7)


## Win Repair

குளிர்சாதனப்பெட்டி பழுதடைந்து விட்டதா? கவலையை விடுங்கள். வீட்டிற்கே வந்து சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கின்றோம். (11643)

**077 964 8942**



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு. (நிலப்பரப்பு)**

- 1½ பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- கைதடி சித்த போதனா வைத்தியசாலை, யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவபீடம் கிழக்கு எல்லைகள்.
- சமுர்த்தி வங்கி வடக்கு எல்லைகள்.
- கைதடி சந்தி 200 மீற்றர் தூரம்.
- வட மாகாண சபை 250 மீற்றர் தூரம்.
- மூன்று வழிப்பாதையுடன்
  01. A9 வீதி 100 மீற்றர் தூரம். (16 அடிப் பாதையுடன்)
  02. கைதடி கோப்பாய் வீதி 50 மீற்றர் தூரம் (20 அடிப் பாதையுடன்)
  03. சமுர்த்தி வங்கி அருகாமை வீதி 100 மீற்றர் தூரம். (16 அடிப் பாதையுடன்)
- சுற்றி நல்ல சூழலுடன் நல்ல தண்ணீர் நிலம்.
- செம்மண் காணி.

பார்வையிடும் நேரம் காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை (11642)

**076 658 3621**


# மரண அறிவித்தல்



பிறப்பு 22 - 02 - 1950

இறப்பு 27 - 05 - 2022

## செல்லத்துரை புவனேந்திரன்

(ஓய்வுபெற்ற மேற்பார்வையாளர் - யாழ். போதனா வைத்தியசாலை)

தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை புவனேந்திரன் அவர்கள் நேற்று (27.05.2022) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - ஆச்சிமுத்து தம்பதியரின் இளையபுத்திரனும் பேபிகமலாவின் (ராணி) பாசமிகு கணவரும் காலஞ்சென்ற இராசையா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான கமலநாதன், பாலச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கோகிலேந்திரன் (பிரசன்னா-லண்டன்), ஸயந்தன் (கொமர்ஷல் வங்கி - சுன்னாகம் கிளை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் றோஜிதா (லண்டன்), துஷானி (சட்டத்துறைத் தலைவர்- யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ராகவி, ஐஸ்வர்யா, வியாஸகி, பாவலன், நாவலன் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற சிங்கரட்ணம் மற்றும் இராஜேஸ்வரி, செல்வராஜா, மதியரட்ணம், றேணுகாதேவி, தங்கராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (29.05.2022) ஞாயிற்றுக்கிழமை மதியம் 1.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.663, நாவலர் வீதி, நல்லூர்.
021 222 1434
077 725 2181 (11646)
தகவல்: குடும்பத்தினர்


## காணி தேவை

இரணைமடு நீர்ப்பாசனத்திற்குட்பட்ட உறுதிக்காணி (வயல்) மற்றும் யாழ்./ கிளி. மாவட்டத்தில் நகர்ப் பகுதியை அண்மித்த குடியிருப்புக்கான காணி விற்பனைக்கு இருந்தால் தொடர்பு கொள்ளவும். (தரகர் தேவையில்லை)

Viber/ Whatsapp (11647)

**077 330 1798**



## விற்பனைக்கு

மின்பிறப்பாக்கி விற்பனைக்கு உண்டு.
Lister 5kw (England)
Yanmer 5kw (Japan) (11645)

**077 713 0839**


குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



## ஆளுமை திறனூக்கப் பயிற்சிகள் ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில் ஆளுமை திறனூக்கப் பயிற்சிகள் இந்த ஆண்டு முழுவதும் இலவசமாக வழங்கப்பட்டுக்கொண்டு இருப்பதால் இந்த அரியவாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- உடல் நலத்திற்கு → எளியமுறை உடற்பயிற்சிகள்
- உயிர் வளத்திற்கு → சித்தர்களின் வழிவந்த காயகல்ப பயிற்சிகள்
- மன அமைதிக்கு → தியானப் பயிற்சிகள்
- அறிவு வல்லமைக்கு → அகத்தாய்வு பயிற்சிகள்
- உறவுகள் மேம்பட → தற்சோதனைப் பயிற்சிகள்

காலம் :- 28.05.2022 சனிக்கிழமை தொடக்கம் 03.06.2022 வெள்ளிக்கிழமை வரை

நேரம் :- மாலை 5.00 தொடக்கம் 7.00 மணிவரை

பயிற்சிகளை வழங்குபவர்கள்:- துணைப்பேராசிரியர் அருள்நிதி த.நந்தகுமரன் மற்றும் துணைப்பேராசிரியர் அருள்நிதி ந.ஜெயகிருஷ்ணா அவர்கள் (11133)

தொடர்புகளுக்கு:- யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்
இல.81, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.
தொ.இல:- 021 222 2772, 077 736 8745, 071 440 3268, 071 424 6309

## 6 ஆம் ஆண்டு 5 ஆம் ஆண்டு
# நினைவுகள்



ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
ஆறாது எம் துயரம்
ஆண்டாண்டு ஆனாலும்
நீங்காது உம் நினைவலைகள்...

பிறப்பு: 12.05.1939 இறப்பு: 10.08.2016
**வயிரமுத்து சிவலிங்கம்**
(ஓய்வுநிலை ஆசிரியர்)
திதி: அட்டமி

பிறப்பு: 23.11.1950 இறப்பு: 24.05.2017
**சிவலிங்கம் கனகமணி**
திதி: திரியோதசி

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

குப்பிளான் தெற்கு, ஏழாலை. (11626)


## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில் 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)**

- A32, A9 இணையும் பிரதான வீதியில் (றவுண்டப் வோட்)
- A9 வீதியுடன் 6 பரப்பும்
- A9 பிரதான வீதியில் இருந்து 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் மருந்தகங்கள் அமைப்பதற்கும் (பார்மசி)
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

தரகர் தேவையில்லை (11637)

பார்வையிடும் நேரம்
காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை

**077 814 7389, 077 241 7589 - ஜெயம்**



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினி சாவின் விளிம்பில் மக்கள்!

## தாமதிக்காது வீட்டுத்தோட்டத்தில் ஈடுபடுங்கள்

## தேசிய விவசாய ஒருங்கிணைப்புச் சபை

(கொழும்பு)

**அரசாங்கத்தின் தவறான விவசாய கொள்கையினால் முழு விவசாயத்துறையும் வீழ்ச்சியடைந்துள்ளது. எதிர்வரும் ஆகஸ்ட் மற்றும் செப்டெம்பர் மாதங்களில் மக்கள் பட்டினியால் உயிரிழக்கும் நிலைமை ஏற்படும். எனவே தாமதிக்காது வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுங்கள்.**

அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லை. ஆகவே பொது மக்கள் இயலுமான அளவு வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கையில் கட்டாயம் ஈடுபட வேண்டும் என தேசிய விவசாய ஒருங்கிணைப்பின் தலைவர் அநுராத தென்னகோன் நாட்டு மக்களிடம் வலியுறுத்தினார்.

விவசாயத்துறை எதிர்கொண்டுள்ள மிக மோசமான நிலைமை, எதிர்வரும் காலங்களில் ஏற்பட போகும் உணவு தட்டுப்பாடு தொடர்பில்நேற்று முன்தினம் வியாழக்கிழமை அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீட மகாநாயக்க தேரர்களுடன் கலந்துரையாடியதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தவறான விவசாய கொள்கையினால்தற்போது முழு விவசாயத்துறையும் பாதிக்கப்பட்டுள்ளது.

விவசாயத்தில் ஈடுபட தற்போது இரசாயன உரமும்இல்லை, சேதன பசளையும் இல்லை. விவசாயிகள் உரப்பற்றாக்குறையுடன் மேலதிகமாக தற்போது எரிபொருள் பிரச்சினையையும் எதிர்கொள்ள நேரிட்டுள்ளது.

எரிபொருள்,உரம் இவ்விரண்டும் இல்லாவிடின் குறைந்த பட்ச அளவிலேனும் விவசாய நடவடிக்கையில் ஈடுபட முடியாத நிலைமை ஏற்படும்.

ஒரு வருடத்திற்கு மாத்திரம் 33 இலட்சம் மெற்றிக்தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட வேண்டிய நிலையில் டொலர் நெருக்கடி காரணமாக உணவுப் பொருட்களின் இறக்குமதியும் எதிர்வரும் காலங்களில் மட்டுப்படுத்தப்படலாம்.

தவறான சேதனப் பசளை திட்டத்தினால் பெரும்போக விவசாயத்தில் நெற்பயிர்ச்செய்கையின் விளைச்சல் 60 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது.

அரசாங்கத்தின் தவறான விவசாய கொள்கையினால் முழு விவசாயத்துறையும் மிக மோசமான விளைவுகளை எதிர்கொண்டுள்ளது.

எதிர்வரும் காலங்களில் பாரிய உணவுத் தட்டுப்பாடு ஏற்பட போகிறது. அதனை எதிர்கொள்ள வேண்டும் என அரசாங்கம் வெறும் பேச்சளவில் மாத்திரம் குறிப்பிட்டுக்கொள்கிறதே தவிர செயல் ரீதியில் முன்னேற்றகரமான வகையில் எவ்வித தீர்மானங்களையும் இதுவரையில் செயற்படுத்தவில்லை.

உணவுத் தட்டுப்பாடு தீவிரமடைந்தால் எதிர்வரும் ஆகஸ்ட் மற்றும் செப்டெம்பர் மாத காலப் பகுதியில் மக்கள் உணவின்றி பட்டினியால் உயிரிழக்கும் அவல நிலைமை ஏற்படும்.

நடுத்தர மக்களால் கொள்வனவு செய்ய முடியாத அளவிற்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை சடுதியாக அதிகரித்த நிலையில் தான் உள்ளது.

அரசாங்கத்தின் மீது நம்பிக்கை கிடையாது. ஆகவே பொது மக்கள் வெற்றுக் காணிகளில் தங்களால் முடிந்த வரை வீட்டுத் தோட்ட பயிர்ச்செய்கையில் ஈடுபடுவது அத்தியாவசியமானது.

தமக்கான உணவுப் பொருட்களை தாமே உற்பத்தி செய்து கொண்டால் எதிர்கொள்ள வேண்டிய சவால்களை இயலுமான வரையிலாவது குறைத்துக்கொள்ளலாம் என அவர் தெரிவித்தார். (நி-6)

## வடக்கு கடற்றொழிலாளர்களுக்கான மண்ணெண்ணெய் இறக்கும் பணிகள் ஆரம்பம்

(கொழும்பு)



வடக்கு கடற்றொழிலாளர்களுக்கு தேவையான மண்ணெண்ணெய் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ள நிலையில், அவற்றை இறக்கும் பணிகள் துரிதமாக இடம் பெற்று வருகின்றன.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியால் வடக்கு கடற்றொழிலாளர்களுக்கு இந்திய அரசாங்கம் முதற் கட்டமாக வழங்கியுள்ள சுமார் 15,000 லீற்றர் மண்ணெண்ணெய் இவ்வாறு கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## இலங்கைக்கு உதவிக்கரம் நீட்டிய பிரான்ஸ்

(கொழும்பு)



பிரான்ஸ் அரசாங்கம் மூன்று இலட்சம் யூரோ பெறுமதியான மயக்க மருந்து மற்றும் சுவாச நோய்களுக்கு பயன்படுத்தும் மருந்துகளை இலங்கைக்கு அன்பளிப்பு செய்துள்ளது. இந்த மருந்துத் தொகையை இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் எரிக்லெவர்டு உத்தியோகபூர்வமாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவிடம் கையளித்துள்ளார்.

பிரான்ஸ் அரசாங்கம் வழங்கியுள்ள மனிதாபிமான உதவியான இந்த மருந்துத்தொகையின்பெறுமதி 11 கோடி இலங்கை ரூபாவுக்கும் அதிகமானது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

## திங்கட்கிழமை முதல் எரிவாயு விநியோகம்

(கொழும்பு)

நாளை மறுதினம் திங்கட் கிழமை முதல் எரிவாயு விநியோகத்தை முன்னெடுக்கக் கூடியதாக இருக்கும் என லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

எரிவாயுவை தாங்கிய கப்பல் நாளை ஞாயிற்றுக்கிழமை இலங்கையை வந்தடையும் என லிட்ரோ நிறுவனத்தலைவர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இலங்கைக்கு வரவிருந்த 3,500 மெற்றிக் தொன் எரிவாயு தாங்கிய கப்பல், நாட்டுக்கு வருவதற்கு மேலும் தாமதமாகும் என லிட்ரோ நிறுவனம் அறிவித்திருந்தது.

குறித்த கப்பல் எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்காக இந்தியாவுக்குச் சென்றுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## இம்முறை 50 சதவீதமளவில் அறுவடை குறைவடையக்கூடும்

### பேராசிரியர் புத்திமாரம்பே எச்சரிக்கை

(கொழும்பு)

சிறுபோகத்தில், 50 சதவீதமளவில், அறுவடை குறைவடையக்கூடும் என பேராதனை பல்கலைக் கழக விவசாய பீடத்தின் சிரேஷ்ட பேராசிரியர் புத்தி மாரம்பே தெரிவித்துள்ளார்.

450,000 ஹெக்டேயர் அளவிலான நிலத்தில் முன்னெடுக்கப்படும். சிறுபோகச் செய்கை குறைவடைந்துள்ள சூழ் நிலையில், 325 ஹெக்டேயர் பரப்பிலான விவசாய நிலத்தில் மாத்திரம் செய்கை ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரசாயன உரம் கிடைப்பது தொடர்பில், விவசாயிகள் மத்தியில் உள்ள நிச்சயமற்ற தன்மையே பயிர்ச்செய்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளமைக்கு பிரதான காரணமாகும்.

இதன் காரணமாக சிறுபோகத்தில் 50 சதவீதம் அளவில் அறுவடையில் வீழ்ச்சி ஏற்படும்.

முன்னர் தாங்கள் எதிர்வு கூறியது போன்று, எதிர்வரும் ஒக்டோபர் மாத மாகும்போது, எமது உற்பத்தியில், அவசியமான அரிசியை மக்களுக்கு வழங்க முடியாத நிலை ஏற்படும் என பேராதனை பல்கலைக்கழக விவசாய பீடத்தின் சிரேஷ்ட பேராசிரியர் புத்தி மாரம்பே தெரிவித்துள்ளார். (நி-6)

## விமல் வீரவன்சவின் மனைவிக்கு 2 வருட கடூழியச் சிறை



(கொழும்பு)


விமல் வீரவன்சவின் மனைவிக்கு கடூழியச் சிறைத்தண்டனை விதித்து கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இதையடுத்து, விமல் வீரவன்சவின் மனைவி சஷி வீரவன்சவுக்கு இரு வருட கடூழிய சிறைத் தண்டனையும் 100,000 ரூபாய் அபராதமும் விதித்து கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

சட்டவிரோதமாக கடவுச்சீட்டு வைத்திருந்தமை தொடர்பான வழக்கிலேயே இத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாபெரும் உதைபந்தாட்ட போட்டி மன்னாரில் இன்று ஆரம்பம்



மறைந்த மன்னார் மறை மாவட்டத்தின் ஓய்வு நிலை ஆயர் வணக்கத்துக்குரிய இராயப்பு ஜோசப் ஆண்டகையின் முதலாம் ஆண்டு நினைவை முன்னிட்டு வட மாகாண ரீதியாக 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாக உள்ளது.

மன்னார் மாவட்ட சிரேஷ்ட உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்படும் மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதி நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெறும். குறித்த இரு நாள் சுற்றுப்போட்டியில் 10 கழகங்கள் கலந்து கொள்ள உள்ளன. (4-6-285)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

2018 மற்றும் 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற நடுவர் பரீட்சையில் சித்தியடைந்த வர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை 29 ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் US Hotel இல் நடைபெறவுள்ளது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியினால் இலங்கை வலைப்பந்தாட்ட சம்மேளனத்தினால் யாழ். மாவட்டத்தில் இச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (4-90)

# மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டி





யாழ்.மாவட்டச் செயலகமும், சமூக சேவைகள் திணைக்களமும் இணைந்து நடத்தும் மாற்றுத்திறனாளிகளுக்கான மாவட்டத் தடகள விளையாட்டுப் போட்டி நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கில் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி நிகழ்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் சா.சுதர்சன் மற்றும் நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி. எழிலரசி அன்ரன் யோகநாயகம் மற்றும் வடமாகாண சமூக சேவைகள் பணிப்பாளர் அகல்யா சேகராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

குறித்த விளையாட்டுப் போட்டி நிகழ்வில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மாற்றுத் திறனாளிகள் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டதுடன் வெற்றி பெற்றவர்களுக்குப் பெறுமதியான பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன. (4-6-18)

KILI PEOPLE

# கிளி பீப்பிளின்

**தாயகத்தின் கல்வி மேம்பாட்டிற்கான நிதி சேகரிப்பு மரதன் ஓட்ட நிகழ்வு**

இம் மரதன் ஓட்ட நிகழ்வில் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி
(பணிப்பாளர், யாழ்.போதனா வைத்தியசாலை)
அவர்கள் கலந்து கொள்ளும்

**EDINBURGH MARATHON - 2022**
**பிரித்தானியா (எடின்புரோ)**

மேற்குறித்த நிகழ்வை வலுப்படுத்தவும் அதற்கு ஆதரவாகவும்
கிளிநொச்சியில் மரதன் ஓட்ட நிகழ்வு

காலம்: 2022.05.29 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்: காலை 7.30 மணி
இடம்: பரந்தன் சந்தி தொடக்கம் கிளிநொச்சி பசுமைப் பூங்காவரை





அனைத்து சமூக மட்ட அமைப்புகள், தொண்டு நிறுவனங்கள் இணைந்து முன்னெடுக்கும் இந்நிகழ்வுக்கு அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புரிமையுடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: கிளிநொச்சியில் நடக்கும் குறித்த மரதன் ஓட்ட நிகழ்வில் மரதன் ஓட்டப் போட்டியாளர்களாக பங்குபற்ற விரும்புவர்கள் பங்குபற்றலாம். **முதலாம், இரண்டாம், மூன்றாம்** மற்றும் **முதல் 10** இடங்களைப் பெறும் போட்டியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்களும் உண்டு.

**சனிக்கிழமை 28.05.2022 பி.ப 5.00 மணிவரை பதிவுகள் ஏற்றுக் கொள்ளப்படும்.**

(C-4382)

தொடர்புகளுக்கு: 077 393 3257, 077 147 3519 | Email: kilipeople.org/cecd.kilinochchi@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முட்டைப் பயன்பாடு குறைந்ததால் மூடப்படும் கோழிப் பண்ணைகள்

(கொழும்பு)

நாட்டில் மக்கள் கோழி முட்டைகளை பயன்படுத்துவது 80 வீதமாக குறைந்துள்ளதாக அகில இலங்கை கோழி முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை சந்தையில் தற்போது ஒரு கோழி முட்டை 30 ரூபாவுக்கும் மேல் விற்பனை செய்யப்படுகிறது.

அத்துடன் கிராம மட்டத்தில் இயங்கி வந்த கோழிப் பண்ணைகளில் 80 வீதமான பண்ணைகள் முற்றாக மூடப்பட்டுள்ளன.

மிகப் பெரிய கோழிப் பண்ணைகளில் 50 வீதமானவை மாத்திரம் தற்போது இயங்கி வருகின்றன. அதேவேளை முட்டை உற்பத்திக்கான செலவு 35 வீதமாக அதிகரித்துள்ளது எனவும் ரத்நாயக்க கூறியுள்ளார்.

கோழிப் பண்ணை தொழிலுக்கு தேவையான பொருட்களின் விலைகள் பெருமளவில் அதிகரித்துள்ளதால், கிராமங்களில் கிராமிய கைத்தொழிலாக மேற்கொள்ளப்பட்டு வந்த கோழிப் பண்ணை தொழிலுக்கு கடும் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

இதன் காரணமாக பாரம்பரியமாக கோழிப் பண்ணைகளை நடத்தி வந்த பலர், அதனை கைவிட்டு, கயிறு தயாரிப்பு போன்ற வேறு துறைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு கிடைக்கும் வரை கோழி முட்டைகளின் விலைகள் மேலும் அதிகரிக்கும் நிலைமை காணப்படுவதாகவும் சரத் ரத்நாயக்க தெரிவித்தார். (நி-6)

# தன்னலம் கருதா சேவையாளர்

## மறைந்தார் மாண்பு



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஓய்வு நிலை நூலகர் திருமதி.ரோகிணி பரராஜசிங்கம் அவர்கள் தனது 82 ஆவது வயதில் 27.04.2022 அன்று இறைபதம் அடைந்த செய்தியறிந்து துயரடைகின்றோம்.

நூலக சேவையில் நாம் தடம்பதிப்பதற்கும் அத்துறையில் எமது அறிவையும் ஆற்றலையும் வளர்த்துக் கொள்வதற்கும் வழிகாட்டியாக அவர் இருந்தார் என்பதில் ஐயமில்லை. பட்டப்படிப்பை நிறைவு செய்த பின், 1997 இல் உதவி நூலகராக நான் நூலகத்தில் இணைந்தபோது நூலகராக திருமதி.ரோ.பரராஜசிங்கம் அவர்கள் கடமையாற்றிக் கொண்டிருந்தார். நூலகத் துறை எமக்கு புதியது. எனினும் அத்துறை தொடர்பிலான பட்டறிவை எமக்கு வழங்குவதில் மிக ஆர்வமாக இருந்தார். நூலக சேவையில் இணையும் தகுதிகாண் உதவி நூலகர்கள் பட்டப்பின் மேற்படிப்பை தொடர்வதற்கான வழிகாட்டுதல்களை அக்கறையுடன் வழங்கி ஊக்குவிப்பார். கல்விசார், கல்விசாரா உத்தியோகத்தர்கள் எனும் பேதமின்றி, அனைத்து நூலக அலுவலர்களினது கற்றல் நடவடிக்கைகளுக்கும் ஆதரவளித்தார். "நூலகத்தில் சேவையாற்றுவோர் கல்வியறிவில் மேம்பட்டவராக இருந்தாலே வாசகருக்கு சிறந்த சேவையை வழங்கமுடியும்" எனக் கூறுவார்.

இவரது காலத்திலேயே பட்டப்பின் மேற்படிப்பிற்கான புலமைப் பரிசில்கள் நூலகத்திற்கு கிடைக்கப் பெற்றன. தன்னுடன் பணியாற்றுபவர்களை மனம் நோகாமலும் ஆனால் அவர்களிடமிருந்து கிடைக்கப் பெற வேண்டிய அவர்களது சேவையை முழுமையாகப் பெறுவதிலும் அவர் திறமையானவர்.

அதுமட்டுமல்லாமல், அவர் தனது மாணவப் பருவத்திலும் திறமையானவராக விளங்கியுள்ளார். வடமராட்சி பருத்தித்துறையில் 30.07.1940 அன்று பிறந்த அவர் தனது பாடசாலைக் கல்வியை யா/மெதடிஸ்ட் பெண்கள் உயர்தர பாடசாலையிலும், பல்கலைக்கழக கல்வியை சென்னைப் பல்கலைக்கழகத்திலும் தொடர்ந்தார். 1961 இல் விலங்கியல் துறையில் சிறப்புப் பட்டத்தினைப் பெற்றுக் கொண்டார். விலங்கியல் துறை பட்டதாரியாக இருந்த போதிலும் இவர் சிறுவயது முதல் கொண்டிருந்த நூல்கள் மற்றும் வாசிப்பின் மீதான ஈடுபாடு காரணமாக நூலகத் தொழிலினை தன் விருப்பத்திற்குரிய துறையாக மாற்றிக் கொண்டார். இதன் காரணமாக இலங்கை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 1964-65 காலப்பகுதியில் பட்டப்பின் நூலகவியல் டிப்ளோமா பட்டத்தினைப் பெற்றுப் பின் 1983 இல் மீண்டும் சென்னைப் பல்கலைக்கழகத்தில் நூலகமும் தகவல் விஞ்ஞானமும் துறையில் முதுமாணிப் பட்டத்தினை மிகத் திறமையான மாணவி (Outstanding student) எனும் சிறப்புடன் பெற்றுக் கொண்டார். கற்கை நெறிக் காலத்தில், மாணவர்கள் கற்கை நெறியில் காட்டும் முழுமையான ஈடுபாட்டிற்கும், பரீட்சைகளில் காட்டும் திறமைக்குமாக இவ்விருது வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

1978 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உதவி நூலகராக இணைந்து கொண்ட திருமதி.ரோ.பரராஜசிங்கம் தனது தன்னலமற்ற சேவையாலும், திறமையாலும் 1995 இல் நூலகராக நியமனம் பெற்றார். நூலகராக அவர் பதவி வகித்த காலப்பகுதியில் (1995 - 2005) யாழ்குடாநாட்டில் யுத்த நிலைமை மிக மோசமாக இருந்தது. இக்காலப் பகுதியில் நூலகத்தின் பெறுமதியான புத்தகங்களையும், வரலாற்று ஆவணங்களையும் பாதுகாப்பதில் தனது உயிராபத்தையும் பொருட்படுத்தாது முன்னின்று செயற்பட்டவர். இக்காலத்தில் ஊதியத்துடனான விடுமுறையை (Sabbatical leave) அவர் பெறுவதற்கு தகுதியிருந்தும் நூலகத்தின் வளர்ச்சியையும் பாதுகாப்பையும் கருத்திற் கொண்டு அவர் அந்தச் சலுகையை பெற்றுக் கொள்ளவில்லை.

மிகக் குறைந்த ஆளணியினருடன் இக்கட்டான காலப்பகுதியில் மிகத்திறம்பட நூலகத்தை இயக்கியமை அவரது நிர்வாகத் திறனுக்கு எடுத்துக்காட்டாகும். நூலக உத்தியோகத்தர்களும் தன்னலம் பாராது தமது பங்களிப்பை வழங்கினார்கள் என்பதில் ஐயமில்லை. அவர் நூலகச் சேவையில் இணைந்த காலப்பகுதியில், அதாவது 1980களில் ஆரம்பிக்கப்பட்ட பிரதான நூலகத்திற்கான நிரந்தர கட்டடத்திற்கான வேலைத்திட்டமானது 2001 இல் அவரது பதவிக் காலத்திலேயே பூர்த்தி செய்யப்பட்டது. யுத்த நிலைமையில் அந்நேரத்தில் இது ஒரு சவாலான விடயமாகக் காணப்பட்டது. கால மாற்றத்திற்கேற்ப நூலக செயற்பாடுகளை கணினிமயப்படுத்தும் செயற்றிட்டத்திற்கான ஆரம்பக்கட்ட வேலைகள் 2003 இல் அவரால் தொடக்கி வைக்கப்பட்டது.

மேலும், யாழ்.பல்கலைக்கழகத்தின் உயர்பட்டப் படிப்புக்கள் பீடத்தில் நூலகவியல் பட்டப்பின் டிப்ளோமா கற்கை நெறியினை 2005 இல் ஆரம்பிப்பதற்கும் தூண்டுகோலாக இருந்தவர் இவரே. நீண்டகாலமாக யாழ்ப்பாணத்தில் நடைபெறாதிருந்த இலங்கை நூலகச் சங்கத்தின் கற்கை நெறிகளை மீள ஆரம்பிப்பதற்கும் பல வழிகளிலும் பங்காற்றியிருந்தார்.

பல்கலைக்கழகத் தேவைகளுக்கான ஆராய்ச்சித்துறையில் இவர் ஈடுபாடு காட்டி வந்ததன் பயனாக, லேசர் தொழில்நுட்பத்திற்கான சுட்டி மற்றும் சாராம்ச சேவைகள் பற்றிய வழிகாட்டிகளையும் (Major Indexing and Abstracting Services in the field of Laser Technology). நூலக விஞ்ஞான, தகவல் தொழில்நுட்பக் கல்விக்கான குறிப்புரையுடனான வழிகாட்டியொன்றினையும், பட்டியலாக்கம், பகுப்பாக்கம், சுட்டிகள் மற்றும் நூலக முகாமைத்துவம் சார்ந்த பல ஆய்வுக் கட்டுரைகளையும் ஆங்கிலத்தில் எழுதியிருக்கின்றார். மேலும் யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம், இலங்கை நூலகச் சங்கம் ஆகியவற்றின் ஆயுட்கால உறுப்பினராகவிருந்து இந்த அமைப்புக்களின் வளர்ச்சிக்கும் தனது கடின உழைப்பினை இவர் வழங்கியிருக்கிறார்.

இவர் 27 வருடகால நூலக சேவையிலிருந்து 2005 இல் இளைப்பாறியிருந்தார். எனினும், 2015 வரை நூலகம் சார்ந்த கற்கை நெறிகளுக்கு வளவாளராக தனது பங்களிப்பை வழங்கியிருந்தார். மிகச் சவாலான காலப் பகுதியில் யாழ்.பல்கலைக்கழக நூலகத்தின் வளர்ச்சிக்கும், எமது பிராந்தியத்தில் நூலகத்துறையில் தகுதி வாய்ந்த ஆளணியினரை உருவாக்குவதிலும் தன்னாலான பங்களிப்பை வழங்கிய அவரது அளப்பரிய சேவை நூலக சமூகத்தினரால் என்றும் நினைவு கூறப்படும்.

அவரது மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றேன்.

**கலாநிதி (திருமதி) கல்பனா சந்திரசேகர்**
**பதில் நூலகர்,**
**யாழ்.பல்கலைக்கழகம்**

# இராசிபலன்

**28.05.2022**
**வைகாசி 14, சனிக்கிழமை**
**திரயோதசி பிற்பகல் 2.41 மணிவரை**

**பரணி பின்னிரவு 5.45 மணிவரை**
**சுபநேரம் 2.52-4.22 மணிவரை**
**இராகுகாலம் 8.52-10.22 மணிவரை**

**அக்கினி நாள் முடிவு,**
**சித்தாமிர்தம்**
**சந்திராஷ்டமம் - அத்தம்**

**வளவன்**



மேஷம்

குடும்பத்ினர் உங்களின் செயற்பாடுகளுக்கு பக்கபலமாக இருப்பர், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம்.



கடகம்

கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம் பெறலாம், தலைமைப் பொறுப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், போசன சுகமுண்டு.



துலாம்

பொது நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், காரிய அனுகூலமுண்டு, உற்சாகமான நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.



மகரம்

பொது நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வரவேண்டிய பணவரவுகள் வந்து சேரலாம், உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல ஆலோசனையைக் கூறலாம்.



ரிஷபம்

எதிலும் கோபத்தைக் குறைத்து பொறுமையாகச் செயற்படுவது நல்லது, ஆதாயம் இல்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது குறையும் ஏற்படலாம்.



சிம்மம்

மறைமுகப் போட்டிகள் அகன்று வியாபார விருத்தி ஏற்படலாம், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம், மறதியால் விட்டுப் போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள்.



விருச்சிகம்

அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு.



கும்பம்

பக்குவமாகப் பேசி காரியம் சாதித்துக் கொள்வீர்கள், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.



மிதுனம்

இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், காரிய அனுகூலமுண்டு.



கன்னி

மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், ஒரு வகையில் வந்த வரவுகள் இன்னொரு [illegible] வில் [illegible] லாம், வழி[illegible] காண வேண்டிய நாள்.



தனுசு

உறவினர் வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும், எதிர்பார்ப்புகள் நிறைவேறி ஏற்றம் பெறும் [illegible] நேரத்திலேயே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.



மீனம்

குடும்பத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூடும், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரவெட்டி பிரதேச செயலகத்தினால்

# எரிபொருள் நெருக்கடியை குறைக்க புதிய நடைமுறை அறிமுகம்

(கரணவாய்)

எரிபொருளைப் பெறுவதற்கு கரவெட்டி பிரதேச செயலகம், கட்டைவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் மற்றும் உடுப்பிட்டி பலநோக்குக்கூட்டுறவுச் சங்கமும் இணைந்து புதிய நடைமுறை ஒன்றை கொண்டு வந்துள்ளது.

அதாவது கரவெட்டி பிரதேச செயலகத்தில் பதிவிலுள்ள மற்றும் பாவனையுள்ள வாகனங்களுக்கு அட்டை ஒன்று விநியோகிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் எரிபொருள் வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பாக கரவெட்டி பிரதேச செயலாளர் ஈ.தயாரூபன் கருத்துத் தெரிவிக்கையில்,

இவ்வட்டை வழங்கப்பட்டதன் மூலம் எரிபொருள் கறுப்பு சந்தையில் விற்கப்படுவது தவிர்க்கப்படும்.


அத்துடன் பலர் தினமும் நீண்ட வரிசையில் காத்திருப்பதையும் தவிர்த்துக் கொள்ள முடியும். இதனால் மக்கள் தமது அன்றாட வேலைகளை சுமையின்றி செய்யக் கூடியதாக இருக்கும்.

சிலர் தினமும் எரிபொருளை நிரப்பிய பின்னர் அதனைக் கறுப்புச் சந்தையில் விற்பனை செய்வதற்காக தொடர்ந்தும் பல தடவைகள் வரிசையில் நிற்பது அறியக் கூடியதாகவுள்ளது. இதனால் மோட்டார் வாகனங்களை பயன்படுத்தும் பெண்கள், வயோதிபர்கள் மற்றும் வியாபாரிகள் தமது தேவைக்கேற்ப குறித்த நேரங்களில் எரிபொருளை பெற முடியாமல் சிரமப்படுகின்றனர்.

இதனைத் தவிர்ப்பதற்காக கரவெட்டி பிரதேச செயலகமும் கட்டைவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமும், உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமும் இணைந்து அட்டையை வ்ழங்கியுள்ளோம்.

இந்த அட்டை வழங்கும் செயற்பாடு தற்போது முன்னோற்பாடாக 'அறிமுகப்படுத்தியுள்ளோம். இதில் ஏற்படும் குறைபாடுகளை இனங்கண்டு சீர்திருத்தும் நடவடிக்கையையும் மேற்கொள்ளவுள்ளோம் என தெரிவித்தார். (4-6-60)

# நல்லூர் கந்தனுக்கு சகஸ்ர சங்காபிஷேகம்



(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் கும்பாபிஷேக தினமாகிய நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை சகஸ்ர சங்காபிஷேகமானது ஆலயத்தில் விசேட அபிஷேக பூசைகள் இடம்பெற்று மூலஸ்தானத்திலே வீற்றுள்ள வேல்பெருமானுக்கு அந்தண சிவாச்சாரியார்கள் 1008 சங்குகளால் ஆனந்த அபிஷேகம் இடம்பெற்றது.

மாலை 4.30 மணிக்கு சண்முக பெருமானுக்கும் வள்ளி தேவசேனா திருக்கல்யாணம் இடம்பெற்று தொடர்ந்து தண்டிகையில் உள்வீதியுலா இடம்பெற்றது. (4-6-33)

# உரும்பிராய் கற்பக விநாயகருக்கு மஹா கும்பாபிஷேகம்

(குப்பிழான்)

உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 6.45 மணி முதல் காலை 8.30 மணி வரை இடம்பெறவுள்ளது.

இவ்வாலய மஹா கும்பாபிஷேகத்திற்கான கிரியைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும்.

எதிர்வரும் 2 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை அடியவர்கள் எண்ணெய்க் காப்புச்சாத்தும் நிகழ்வும் நடைபெறும் எனவும் ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (4-6-18)

# ஸ்கொட்லாந்து மரதன் ஓட்டத்தில் மருத்துவர் சத்தியமூர்த்தி

(யாழ்ப்பணம்)

யாழ்.போதனா மருத்துவமனை பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்தி நாளை 29 ஆம் திகதி ஸ்கொட்லாந்து நாட்டில் நடைபெற உள்ள எடின்பரோ மரதன் நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளார்.

கிளி.மக்கள் அமைப்பு எதிர்வரும் ஜீலை மாதம் லண்டனில் நடைபெற உள்ள கிளி.மக்கள் அமைப்பின் மாபெரும் ஒன்றுகூடல் நிகழ்வை முன்னிட்டு எடின்பரோ மரதன் நிகழ்வில் கலந்துகொண்டு நிதி சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

கிளி.மக்கள் அமைப்பினால் தாயக மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக இந்த நிதி பயன்படுத்தப்பட உள்ளது. (4-6)

# சப்பச்சி மாவடி பிள்ளையார் மஹோற்சவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சப்பச்சி மாவடிப் பிள்ளையார் ஆலய மஹோற்சவப் பெருவிழா எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

அந்த வகையில் எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை வேட்டைத் திருவிழாவும், 13 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6-30)

# நினைவேந்தலும் நூல் வெளியீடும்

(குப்பிழான்)

சுட்டு படுகொலை செய்யப்பட்ட மூத்த ஊடகவியலாளர் நாட்டுப் பற்றாளர் ஐயாத்துரை நடேசனின் 18 ஆவது ஆண்டு நினைவேந்தலும் நூல் வெளியீட்டு நிகழ்வும் யாழ்.ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் யாழ்.ஊடக அமையத்தின் தலைவர் ஆ.சபேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஐயாத்துரை நடேசன் தொடர்பில் அவருடன் ஊடகப் பணியாற்றிய சக ஊடகவியலாளர்கள், செயற்பாட்டாளர்களெனப் பலரது நினைவு கூரலுடன் வெளிவந்துள்ள நூல் அறிமுக வெளியீடும் இடம்பெறும். (4-6-18)

# சாரதி அனுமதிப்பத்திரத்திற்கான எழுத்துப் பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தில் சாரதி அனுமதிப் பத்திரத்திற்காக விண்ணப்பித்து யூன் மாதம் 30 ஆம் திகதி வரை அனுமதி அட்டையினை பெற்றுக் கொண்ட வர்களுக்கான விசேட பரீட்சைகள் எதிர்வரும் யூன் மாதம் 4 மற்றும் 5 ஆம் திகதிகளில் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ் எழுத்துப் பரீட்சைகள் காலை 9 மணி, மு.ப. 11 மணி மற்றும் பி.ப. 12.30 மணி என மூன்று அமர்வுகளாக நடைபெறவுள்ளன.

பரீட்சார்த்திகள் பரீட்சை அனுமதி அட்டையுடன் அதன் போட்டோ பிரதி, தேசிய அடையாள அட்டை, மருத் துவ சான்றிதழ் ஆகிய ஆவணங்க ளுடன் குறித்த திகதியில் வருகை தந்து பரீட்சைக்கு தோற்ற முடியும் என மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் அறிவித்துள் ளது. (4-6-7)

1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 04 . 10 . 1938



மறைவு 28 . 05 . 2021

அமரர் .திரு.

மோசஸ் பொன்ராசா

உயிருக்குள் அடைகாத்து
உதிரத்தை பாலாக்கி
பாசத்தில் தாலாட்டி
பல இரவுகள் தூக்கத்தை தொலைத்து
நமக்காகவே வாழ்ந்த அன்புத் தெய்வம்

63, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(11607)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரக்கறிகளின் விலை மேலும் அதிகரிக்கும்

(கொழும்பு)

அடுத்த மாத இறுதிக்குள் நாட்டில் மரக்கறிகளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்படும் என மரக்கறி வியாபாரிகள் மற்றும் பொருளாதார மத்திய நிலைய அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பொருளாதார மையங்களுக்கும் நேற்று முன்தினம் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலே மரக்கறி கையிருப்பு கிடைத்துள்ளது. இனிவரும் நாட்களில் வியாபாரிகள் மற்றும் நுகர்வோர் பாரிய சிரமங்களை சந்திக்க நேரிடும் என தெரிவிக்கப்படுகின்றது.

எரிபொருள் விலை உயர்வால் பொருளாதார மையங்களுக்கு லொறிகள் வராததால் பல மையங்கள் வெறிச்சோடி காணப்பட்டுள்ளன.

எரிபொருள் விலை அதிகரிப்பு பயிர்ச்செய்கையிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதனால், விவசாயிகள் குறைந்த அளவிலான காய்கறிகளை மட்டுமே பொருளாதார மையங்களுக்கு கொண்டு வந்துள்ளனர். இதனால் நேற்று முன்தினம் காய்கறிகளின் மொத்த விலையும் உயர்ந்து காணப்பட்டன.

எதிர்வரும் நாட்களில் மரக்கறிகளின் விலை மேலும் உயரும் என பொருளாதார மையம் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி-6)

# உணவு பஞ்சத்தை தடுக்க நல்லூர் பிரதேசசபை முன்னாயத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

நாட்டின் பொருளாதார மந்த நிலையை கருத்திற்கொண்டு நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் வசிக்கும் பொதுமக்களின் நலன் கருதி பிரதேசசபையினால் இரண்டு திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளதாக நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் ப. மயூரன் தெரிவித்தார்.

நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நல்லூர் பிரதேச சபையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கமைய குறுங்கால வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் முகமாக வட்டார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலகத்தின் ஊடாக பெறப்படும் பயனாளிகளுக்கு விதைகள், நாற்றுக்கள், இயற்கைப் பசளை வழங்கப்பட்டு அதற்கான வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன. மேலும் சனசமூக நிலையங்களை தயார்ப்படுத்தி உணவுப் பஞ்சப் பற்றாக்குறையில் இருக்கும் குடும்பங்களுக்கு உடனடியாக உணவுப் பொதிகளை வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காணி வசதியுள்ளவர்கள் கண்டிப்பாக வீட்டுத் தோட்டங்களை உருவாக்கி மேம்படுத்த வேண்டும். அவர்களுக்கு எந்த உதவிகளையும் நல்லூர் பிரதேசசபை மேற்கொள்வதற்கு தயாராக உள்ளது. எம்முடன் இணைந்து தனியார் தொண்டு நிறுவனங்களும் தயாராக உள்ளன எனத் தெரிவித்தார். (4-6-33)

# இலங்கைக்கு உதவ கைகோர்த்த ஜப்பான், இந்தியா

(கொழும்பு)

இலங்கையின் நெருக்கடியான சூழலில் இந்தியாவும் ஜப்பானும் இணைந்து பணியாற்றுவதற்கு இணங்கியுள்ளதாக ஜப்பான் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அண்மையில் டோக்கியோவில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் ஜப்பானியப் பிரதமர் ஃபுமியோ கிஷிடாவுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் அவர் இதனைத் தெரிவித்தார். (நி-6)



அகில இலங்கை கம்பன் கழகத்தின் நிறுவுனர் கம்பவாரிதி இ.ஜெயராஜ் யாழ்ப்பாணத்திற்கான இந்தியத் துணைத்துதுவர் ராகேஷ் நட்ராஜை துணைத் தூதரகத்தில் நேற்று சந்தித்தார்.

(படம்-சிவசாந்தன்)

# மத்திய வங்கியின் நாணய சபையின் உறுப்பினராக அந்தோனி நிஹால் பொன்சேகா நியமனம்

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையின் உறுப்பினராக அந்தோனி நிஹால் பொன்சேகா நேற்று முன்தினம் முதல் பாராளுமன்ற சபையினால் நியமிக்கப்பட்டுள்ளார் என பாராளுமன்ற செயலாளர் தெரிவித்துள்ளார். (நி-6)

**Professor Sivapathasuntharam Mageswaran Memorial Lecture – 2022**

(Former Dean of the Faculty of Science & Former Head of the Department of Chemistry)

By

**Senior Professor Priyani A. Paranagama**
**Chair Professor**
**Department of Chemistry**
**University of Kelaniya**
**Sri Lanka**

on

**'A Journey Through the Fascinating World of Endolichenic Fungi : Bioactivity & Secondary Metabolites'**

on

Monday 30th May, 2022 at 3.00 p.m
at the Board Room,
University of Jaffna

Join Zoom Meeting
https://learn.zoom.us/j/68161980551?pwd=eG9NalFyMytrdjNvMUcvcFNmWnE0UT09
Meeting ID: 681 6198 0551
Passcode: Prof_ML_30

**Registrar,**
**University of Jaffna.**
**Sri Lanka.**

(c-4380)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 1<br>கி.பா: சூரி 8 செவ் 4 இல்<br>உயரம்:5'7"<br>தகைமை/ தொழில்:MBBS வைத்தியர்<br>எதிர்பார்ப்பு: உயர் பதவி தீவுப்பகுதி வேண்டாம்<br>தொ.இ: B/9960 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 2<br>கி.பா: சூரி 1 செவ் 3 இல்<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு: அரச தொழில் அல்லது வெளிநாடு<br>தொ.இ:G/9983 |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 2<br>கி.பா:சூரி 1 செவ் 9<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: MA பட்டதாரி ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி சைவ போசனம் அசைவமும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/9961 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 4<br>கி.பா: 49 சூரி 1 செவ் 12 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BA,MA ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரச தொழில். சைவ போசனம் விரும்பத்தக்கது<br>தொ.இ: G/9984 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 4<br>கி.பா: சூரி 7 செவ் 5<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: A/L ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரச தொழில் ஆசிரியர் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/9966 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 2<br>கி.பா: 26 சூரி 5 செவ் 7 இல்<br>உயரம் : 5'<br>தகைமை/தொழில்: BSc<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர் உள்நாடு மட்டும்<br>தொ.இ:G/9985 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம் : உத்திரட்டாதி 1<br>கி.பா: சூரி 7 செவ் 10 இல்<br>தகைமை/தொழில்: A/L முகாமையாளர் தனியார்)<br>எதிர்பார்ப்பு : சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/9969 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 2<br>கி.பா: 35¼ சூரி 3 செவ் 1 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/ தொழில்:BA,MA ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ:G/9986 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 57

# ஏமாற்ற நினைக்கும் பேராசை



ஒரு யாசகர் விலை உயர்ந்த வைரத்தை வழியில் கண்டெடுத்தார். அதன் மதிப்பு என்னவென்று தெரியாமலே அதை தன்னுடன் இருந்த கழுதையின் காதில் மாட்டிவிட்டார்.

அதை கண்காணித்துக் கொண்டிருந்த ஒரு வைர வியாபாரி அவரிடம் சென்று "இந்தக் கல்லை எனக்குக் கொடுத்தால் நான் உனக்குப் பணம் தருகிறேன். எவ்வளவு வேண்டும் கேள்" என்றார்.

உடனே யாசகர் "அப்படியானால் ஒரு ரூபாய் தந்துவிட்டு இந்தக் கல்லை வைத்துக்கொள்" என்றார்.

அதற்கு அந்த வைர வியாபாரி இன்னும் குறைவாக வாங்கும் எண்ணத்துடன் "ஒரு ரூபாய் அதிகம்! நான் உனக்கு 50 பைசா தருகிறேன் இல்லை என்றால் வேண்டாம் என்றான்" யாசகர்.

அப்படியானால் பரவாயில்லை அது இந்த கழுதையின் காதிலே இருக்கட்டும்" என்றவாறே நடக்கலானான்.

வைர வியாபாரி எப்படியும் அவன் தன்னிடம் அதை 50 பைசாவிற்கு தந்துவிடுவான் என்ற எண்ணத்துடன் காத்திருந்தான்.

அதற்குள் அங்கு வந்த இன்னொரு வியாபாரி அந்த யாசகரிடம் 1000 ரூபாய் தந்து அந்த வைரத்தை வாங்கிக் கொண்டார்.

இதை சற்றும் எதிர்பாராத முதல் வைர வியாபாரி அதிர்ச்சியுடன் "அட அடிமுட்டாளே! கோடி ரூபாய் மதிப்புள்ள வைரத்தை வெறும் ஆயிரத்துக்கு கொடுத்துவிட்டு இவ்வளவு மகிழ்ச்சியாக செல்கிறாயே! நன்றாக ஏமாந்துவிட்டாய்" என்றார்.

அதைகேட்ட யாசகர் பலத்த சிரிப்புடன் "யார் முட்டாள்..?. எனக்கு அதன் மதிப்புத் தெரியாது அதனால் அதை இந்த விலைக்கு விற்றுவிட்டேன்.

மேலும் எனக்கு இதுவே மிகப் பெரிய தொகை எனவே நான் மிகுந்த மகிழ்வுடன் இருக்கிறேன் , அதன் மதிப்புத்தெரிந்தும் வெறும் 50 பைசாவிற்காக அதை இழந்துவிட்டாய் இது எவ்வளவு பெரிய முட்டாள்தனம்" என்றவாறே நடக்கலானான்.

இப்படித்தான் நம்மில் பலர் மிகச்சிறிய சந்தோசங்களுக்காக விலைமதிப்பற்ற வாழ்க்கையையே இழந்து விடுகிறோம்.



Bosco Thusha

அன்பு வாசகர்களே!

முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

# கிழக்கு திமோரில் நிலநடுக்கம்

## இந்திய பெருங்கடலுக்கு சுனாமி எச்சரிக்கை விடுப்பு

(டில்லி)

கிழக்கு திமோர் கடற்கரையில் 6.1 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டதை யடுத்து, இந்தியப் பெருங்கடல் பகுதிக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை கிழக்கு திமோருக்கும் இந்தோனேசியாவிற்கும் இடையே பிளவுபட்டுள்ள திமோர் தீவின் கிழக்கு முனையில் இருந்து 51.4 கி.மீ 32 மைல் ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு தெரிவித்து ள்ளது.

இந்த நிலநடுக்கம் இந்தியப் பெருங்கடல் பகுதியில் சுனாமியை உருவாக்கும் திறன் கொண்டதாக இருக்கலாம் என இந்தியப் பெருங்கடல் சுனாமி எச்சரிக்கை மற்றும் தணிப்பு அமைப்பு எச்சரிக்கை விடுத்துள் ளது.

2004 ஆம் ஆண்டில், சுமத்ரா கடற்க ரையில் 9.1 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டு இந்தோனேசியாவில் சுமார் 170,000 பேர் உட்பட அப்பகுதி முழுவதும் 220,000 பேரைக் கொன்ற சுனாமியைத் தூண்டியமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# உல...

# மேலு...

## உலக...

(வோஷிங்டன்) –

உலக அளவில் ெ...

வங்கியின் தலைவர்...

சமீபத்தில் அமெரிக்க வர்த்தக சபையுடனான சந்திப்பில் பேசிய உலக வங்கித் தலைவர், ரஷ்ய-உக்ரைன் போர் நிலைமை இதில் நேரடி தாக்க த்தை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்

# 11 பச்சிளம் குழந்தைகள்

# தீ விபத்தில் உயிரிழப்பு

(செனகல்)

செனகல் நாட்டில் உள்ள மரு த்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்தில் 11 பச்சிளம் குழந்தைகள் உயிரிழ ந்துள்ளன.

செனகல் நாட்டில் உள்ள பொது மருத்துவமனையில் பிறந்த குழ ந்தைகள் உள்ள வோட்டில் திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்பு வீரர்கள், நீண்ட நேரம் போராடி தீயை அணைத்தனர்.

இந்த தீ விபத்தில் 11 பச்சிளம் குழந்தைகள் தீயில் கருகி உயி ரிழந்துள்ளன.

இது குறித்து அந்நாட்டு ஜனாதிபத் டுவிட்டரில் வெளியிட்டுள்ள பதிவில், செனகலின் மேற்கு நகரமான டிவௌ வான் நகரில் உள்ள பொது மரு த்துவமனையின் குழந்தைகளுக் கான பிரிவில் புதன்கிழமை நள்ளிரவு திடீரென ஏற்பட்ட தீ விபத்தில் புதி தாகப் பிறந்த 11 குழந்தைகள் உயிரி ழந்ததாக தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவத்திற்கு வருத்தம் தெரிவித்துள்ள அவர், குழந்தை களின் தாய்மார்களுக்கும் குடும்ப ங்களுக்கும் அனுதாபம் தெரிவித்துள் ளார். (நி-6)

# மிகப்பெரிய உணவு உற்பத்தி நாடான பிரேசிலிலும் அதிகரிக்கும் உணவுப் பஞ்சம் - ஆய்வில் தகவல்

(பிரேசிலியா)

பிரேசிலில் பட்டினி ஆபத்து முன் னெப்போதையும் விட அதிகமாக உள்ளதாக சமீபத்தில் வெளியான ஆய்வு முடிவொன்றில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

தங்கள் குடும்பத்திற்கு உணவு வாங்க முடியாதவர்களின் வீதம் 2019 இல் 30% ஆக இருந்து 2021 இல் 36% ஆக சாதனை மட்டத்துக்கு உயர்ந்துள்ளது என அந்த ஆய்வறி க்கை சுட்டிக்காட்டுகிறது.

2006 ஆம் ஆண்டில் தரவு கண் காணிப்பு தொடங்கியதிலிருந்து லத் தீன் அமெரிக்காவின் மிகப்பெரிய உணவு உற்பத்தியாளரான பிரேசிலில் உணவுப் பாதுகாப்பின்மை உலக சராசரியை விஞ்சுவது இதுவே முதல் முறை என்று கெட்லியோ வர்காஸ் அறக்கட்டளை கடந்த புதன்கிழமை வெளியிட்ட தரவுகளின் புதிய பகுப் பாய்வு முடிவு தெரிவிக்கிறது.

விவசாயப் பொருட்களை உற்பத்தி செய்யும் உலகின் முன்னணி நாடு களில் ஒன்றாக பிரேசில் இருந்தாலும், பிரேசிலியர்கள் இந்த மோசமான சூழ்நிலையை எதிர்கொள்கின்ற னர். (நி-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# க பொருளாதாரம்
# ம் சரிவை சந்திக்கும்
## வங்கி எச்சரிக்கை

ாருளாதார வீழ்ச்சி ஏற்பட வாய்ப்புள்ளதாக உலக
டேவிட் மல்பாஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



துள்ளார்.

உணவு, எரிசக்தி மற்றும் உர ங்களின் விலைகள் கடுமையாக உயர்வதால் உலகப் பொருளாதாரச் சரிவு மேலும் அதிகரிக்கக் கூடும்.

எவ்வாறாயினும், அவ்வாறானதொரு நிலைமையை தடுப்பது மிகவும் கடினமானது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

சீனாவில் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கிய கொரோனா நோய்த் தொற்று பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஏற்கனவே உலகின் நான்காவது பெரிய நாடான ஜேர்மனியின் பொருளாதாரம் மந்தமடைந்துள்ளதாகவும் உலக வங்கியின் தலைவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# இந்தியாவிற்கு குறைந்த விலையில் எண்ணெய்
## ரஷ்யா அதிரடி நடவடிக்கை

(டில்லி)

ரஷ்யா- உக்ரைன் போர் தொடர்ந்து நடைபெற்று வருகின்ற நிலையில், ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் கொள்வனவுகளை நிறுத்துமாறு உலக நாடுகளை மேற்கு நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.

ஆனால் இந்தியா தொடர்ந்து ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் கொள்வனவு செய்யும் என கடந்த புதன்கிழமை உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் குறிப்பிடும் போது இந்தியாவிற்கு ரஷ்யா குறைந்த விலைக்கு எண்ணெய் வழங்க முன்வந்து உள்ளதாகவும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் சலுகைத் தொகை எவ்வளவு என்பது தொடர்பான விடயங்கள் இன்னமும் இறுதியாக முடிவெடுக்கப்படவில்லை என்பதையும் அவர் தெரிவித்தார்.

இப்போது சராசரியாக பெற்றோல் ஒன்றிற்கு $100 ரூபாய் வீதம் இந்தியா மசகு எண்ணெய் கொள்வனவு செய்து வருகிறது.

உலகில் மூன்றாவது மிகப்பெரிய எண்ணெய் இறக்குமதி நாடு இந்தியா என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6)

# சர்வதேச புக்கர் பரிசை வென்ற முதல் இந்திய எழுத்தாளர்




(லண்டன்)

ஆங்கிலத்தில் எழுதப்பட்டு அல்லது மொழிபெயர்க்கப்பட்டு பிரிட்டன் அல்லது அயர்லாந்தில் வெளியிடப்படும் புத்தகத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் புகழ்வாய்ந்த இலக்கிய பரிசான, சர்வதேச புக்கர் பரிசு வழங்கப்படுகிறது.

இந்நிலையில் இந்த ஆண்டு இந்தி எழுத்தாளர் கீதாஞ்சலி ஸ்ரீ, தனது 'ரெட் சமாதி' என்ற நாவலுக்காக புக்கர் பரிசை வென்றுள்ளார்.

இதன் மூலம், சர்வதேச புக்கர் பரிசை வெல்லும் முதல் இந்திய மொழி எழுத்தாளர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

கீதாஞ்சலி ஸ்ரீயின் ரெட் சமாதி நாவல் ஆங்கிலத்தில் 'டோம்ப் ஆஃப் சாண்ட்' என்ற பெயரில் மொழிபெயர்க்கப்பட்டது. பிரபல மொழிபெயர்ப்பாளர் டெய்சி ராக்வெல்லால் என்பவர் ரெட் சமாதியை மொழிபெயர்த்தார்.

புக்கர் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்ட புத்தகங்களின் பட்டியலில் இருந்து தேர்வுக் குழுவுக்கு அனுப்பப்பட்ட முதல் இந்தி மொழி புத்தகமும் இதுவேயாகும்.

இந்த புத்தகத்திற்கு 50,000 பவுண்ட் பரிசுத் தொகை (இந்திய மதிப்பில் சுமார் 49 லட்சம் ரூபாய்) அடங்கிய சர்வதேச புக்கர் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. பரிசுத்தொகை எழுத்தாளர் மற்றும் மொழிபெயர்ப்பாளருக்கு சமமாக பகிர்ந்தளிக்கப்படும். (நி-6)

# உக்ரைனிய எல்லையில் படைகளை நிறுத்தும் பெலாரஸ்



(கீவ்)

உக்ரைன் மீதான ரஷ்யப் படையெடுப்பின் மத்தியில், உக்ரைனிய எல்லையில் தங்களது படைகளை நிலை நிறுத்துவதாக பெலாரஸ்ய ஜனாதிபதி அலெக்சாண்டர் லுகாஷென்கோ அறிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடந்த காணொளி சந்திப்பின் போது, அவர் இந்த உத்தரவினை பிறப்பித்தார்.

நேரம் பறந்துவிட்டதாகவும், இந்த செயற்பாட்டுக் கட்டளையை நிறுவ வேண்டியதன் அவசியத்தை அவர்கள் தீவிரமாக உணர்ந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகைத்தல் பாவனையால் நாட்டில் தினமும் சராசரி 55 மரணங்கள்

(யாழ்ப்பாணம்)

**இலங்கையில் புகைத்தல் பாவனையின் காரணமாக தினமும் சராசரியாக 55 பேர் அகால மரணத்தைத் தழுவுகின்றனர். அதேவேளை வருடத்திற்கு சராசரியாக 20000 இலங்கையர்கள் மரணிக்கின்றனர் என மது சாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.**

மதுசாரம் மற்றும் போதைப் பொருள் தகவல் நிலையத்தின் விசேட ஊடக சந்திப்பு யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போதே இவ் விடயம் தெரிவிக்கப்பட்டது.

மேலும் தெரிவிக்கையில், உலக சுகாதார ஸ்தாபனத்தால் ஒவ்வொரு வருடமும் மே மாதம் 31 ஆம் திகதி சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினமாக பிரகடனப்படுத்தப்பட்டு இருப்பதுடன் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் 2022 ஆம் ஆண்டின் உலக புகையிலை எதிர்ப்பு தினம் "சுற்றுச் சூழலைப் பாதுகாத்தல்" என்ற கருப்பொருளில் இடம்பெறவுள்ளது. புகைப் பொருள் பாவனையானது சூழலை மாசடையச் செய்யும் பிரதான காரணிகளில் ஒன்றாகும். குறிப்பாக, சிகரட் தயாரிப்பதற்கு உலகளாவிய ரீதியில் சுமார் 600 பில்லியன் மரங்கள் வருடாந்தம் வெட்டப்படுகின்றன. சுமார் 84 பில்லியன் தொன் காபன் டயொக்சைட் துணிக்கைகள் சூழலில் சேர்வதனால் புவியின் வெப்பநிலை அதிகரிக்கப்படுகின்றது. மேலும் வருடாந்தம் சிகரெட் தயாரிக்க சுமார் 22,000 பில்லியன் லீற்றர் தண்ணீர் பயன்படுத்தப்படுகிறது. புகையிலை உற்பத்தியினால் 2 மில்லியன் தொன் கழிவுகள் தேங்குகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

எமது நாட்டில் புகைத்தல் பாவனையின் காரணமாக தினமும் சராசரியாக 55 பேர் அகால மரணத்தைத் தழுவுகின்றனர். அதேவேளை வருடத்திற்கு சராசரியாக 20,000 இலங்கையர்கள் மரணிக்கின்றனர். புகையிலை நிறுவனத்தின் வாடிக்கையாளர்கள் தினமும் இறப்பதால் அவ் வெற்றிடத்தை பூரணப்படுத்துவதற்காக அந்நிறுவனம் இளைஞர்களையும், சிறுவர்களையும் பிரதானமான இலக்காகக் கொண்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6-33)



## வெங்காயச் செய்கையில் ஈடுபடுவோர் எண்ணிக்கையில் வீழ்ச்சி

(குப்பிழான்)

யாழ்.வலிகாமத்தின் பல பகுதிகளிலும் தற்போது சிறுபோக வெங்காய விவசாயச் செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

எனினும், நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியின் எதிரொலியாக நிலவும் மண்ணெண்ணெய், பூச்சி கொல்லிகளுக்கு நிலவும் தட்டுப்பாடு காரணமாகவும், உர இறக்குமதித் தடை காரணமாக போதியளவு உரம் இன்மையாலும் சிறுபோக வெங்காய விவசாயச் செய்கையில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இம்முறை யாழ்.மாவட்டத்தில் 2000 ஹெக்டேயர் நிலத்தில் சிறுபோக வெங்காய விவசாயச் செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளதாக விவசாயத்திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.(4-6-18)

## 'கூத்தருவி' நூல் வெளியீடு

(குப்பிழான்)

யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய நாட்டுக்கூத்து அண்ணாவியார்களில் ஒருவரான அமரர். அ.பேக்மன் ஜெயராசாவின் ஓராண்டு நினைவு தினமும் "கூத்தருவி" நூல் வெளி யீடும் இன்று சனிக்கிழமை பிற்பகல்4.30 மணிக்கு 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள கலைத்தூதுக் கலையகத்தில் நடைபெறும்.

குறித்த நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (4-6-18)

## பிரதேச சபை உறுப்பினர் ஒருவருக்கு கொலை மிரட்டல்

### ஒருவர் கைது

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ஒருவருக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பிரதேச சபை உறுப்பினர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் மாங்குளம் பொலிஸாரால் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-6-281)

## கைக்குண்டு மீட்பு



(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட எழுதுமட்டுவாழ் பகுதியில் துர்க்கை அம்மன் ஆலய வீதியில் உள்ள தனியார் காணி ஒன்றில் நேற்று வெள்ளிக்கிழமை வெடிக்காத நிலையில் கைக்குண்டு ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் கைக்குண்டு ஒன்று காணப்படுவதாக இராணுவத்தினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் கைக்குண்டினை மீட்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-6-30)

## கோடாவுடன் ஒருவர் கைது



(சாவகச்சேரி)

சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தின் அதிரடி நடவடிக்கை மூலம் நேற்று வெள்ளிக்கிழமை எழுதுமட்டுவாழ் பகுதியில் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் 4 இலட்சத்து 80ஆயிரம் மில்லிலீற்றர் கோடா மீட்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் உதவி மதுவரி ஆணையாளர் ரொஷான் பெரேராவின் வழிகாட்டுதலில்,சாவகச்சேரி மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி ஆ.ராஜ்மோகனின் ஆலோசனைக்கமைவாக, மதுவரிப் பரிசோதகர் ரசிகரன் தலைமையிலான குழுவினர் குறித்த மீட்பு நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இதன்போது சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டிருப்பதாக சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினர் தெரிவித்தனர். (4-6-30)

## எரிவாயு பெற்றுத்தருவதாக கூறி பணம் பறிக்க முயன்றவர் துரத்தியடிப்பு

(நெளுக்குளம்)

வவுனியா மாவட்ட செயலகத்தில் பணியாற்றும் பெண் அரச ஊழியர்களிடம் எரிவாயு பெற்றுத்தருவதாகக்கூறிபணம் பறிக்க முயன்ற நபர் ஒருவரை துரத்தியடித்த சம்பவம் மாவட்ட செயலகத்தில் நேற்று முன் தினம் இடம் பெற்றுள்ளது.

வவுனியா மாவட்ட செயலகத்தில் பணியாற்றும் கலாசார உத்தியோகத்தரை எனக்கு தெரியும் என்று தெரிவித்துக் கொண்டு ஒருவர் அங்கு பணியாற்றும் பெண் அரச ஊழியர்கள் சிலருக்கு எரிவாயு பெற்றுத் தருவதாக தெரிவித்து ஐந்தாயிரம் ரூபா தருமாறும் தெரிவித்தார்.

இதன்போது சில ஆண் அரச ஊழியர்களுக்கு வெற்று எரிவாயு சிலிண்டரை பெற்றுக் கொள்ளாமல் எரிவாயுவை எவ்வாறு வழங்க முடியும் என்ற சந்தேகம் ஏற்பட்டது.

அப்போது அவர் எங்கள் எங்கு கடை வைத்திருக்கின்றீர்கள் எந்த எரிவாயு விநியோகஸ்தர் எங்கிருந்து எரிவாயு கொண்டுவருகின்றீர்கள் என்ற கேள்விகளைத் தொடுத்த போது அங்கு கூட்டம் அதிகரிக்க முற்பட்டதை உணர்ந்த குறித்த நபர் உஷாராகி அங்கிருந்து தலைதெறிக்க ஓட்டம் எடுத்துள்ளார். இதன் பின்னரே குறித்த நபர் ஏமாற்றிப் பணம் பறிக்க முற்பட்டுள்ளார் என்ற தெரிய வந்துள்ளது. அரச உத்தியோகத்தர்கள் அவரைத் துரத்தச் சென்ற போதும் அவர் தப்பியோடிச் சென்றுள்ளார். (4-6-299)

## தவறவிடப்பட்ட பணப்பை உரியவரிடம் ஒப்படைப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் நிலத்தில் கண்டெடுத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது நேற்று முன்தினம் வியாழக்கிழமை மருத்துவமனையில் உள்ள தனது தாயாரை பார்வையிட வந்த நபர் ஒருவர் மோட்டார் சைக்கிள் தரிப்பிடத்தில் தாயாரின் மருத்துவ செலவுக்கென கொண்டு வந்த 60,000 ரூபாய் பணத்துடன் தனது பணப்பையை தவற விட்டிருந்தார்.

பின்னர் குறித்த பணப் பை மருத்துவமனையின் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரின் கண்ணில் தென்பட்ட நிலையில் அவர் அதனை எடுத்து மருத்துவமனை பொலிஸாரிடம் ஒப்படைத்த நிலையில் பொலிஸார் உரியவரிடம் பணப்பையை கையளித்தனர்.

இந்நிலையில் பாதுகாப்பு உத்தியோகத்தரின் நேர்மையான செயற்பாட்டினை பலரும் பாராட்டிவருகின்றனர்.(4-6-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷ குடும்பத்திற்கெதிராக குரல் கொடுத்த பௌத்த பிக்கு கைது



(கொழும்பு)

அம்பாந்தோட்டைப் பிரதேசத்தில் ராஜபக்ஷ குடும்பத்துக்கு எதிராக தீவிரமாக குரல் கொடுத்து வந்த பௌத்த பிக்கு ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். வேகந்தவில ராஹுல ஹிமி எனும் பௌத்த பிக்குவே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு கோட்டா கோ கம போராட்டக்களத்தில் மாத்திரமன்றி அம்பாந்தோட்டையிலும் இவர் ராஜபக்ஷ தரப்புக்கு எதிரான போராட்டங்களில் தீவிரமாக பங்குபற்றியிருந்தார். அத்துடன் ராஜபக்ஷ அரசாங்கத்தின் சுற்றாடலுக்கு எதிரான நடவடிக்கைகள் மற்றும் சூழல், காடழிப்பு விடயங்களுக்கு எதிராகவும் கடுமையாக கண் டனம் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை வேகந்த ராஹுல ஹிமி வீரகெட்டிய பொலிஸாரினால் வன்முறைகளைத் தூண்டிய குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார். (நி-6)

# 21 ஆவது திருத்த சட்ட மூலத்திற்கு சுதந்திரக்கட்சி ஆதரவு

(கொழும்பு)

உத்தேச 21 ஆவது திருத்தச் சட்டமூலத்திற்கு ஆதரவு வழங் கவுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

21 ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பான விசேட கலந்துரையாடல் டார்லி வீதியில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் அதன் தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்றிருந்தது.

இதன்போதே, இந்த உத்தேச வரைபுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் இணக்கம் ஏற்பட்டதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அத்துடன், 21 ஆவது திருத்த சட்டமூலத்திற்கு தேவையான யோசனைகளையும் முன்வைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி-6)

## ஒரே நாடு ஒரே சட்டம்

# ஜனாதிபதி செயலணியின் பதவிக்காலம் நீடிக்கப்படாது

## ஞானசாரதேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற ஜனாதிபதி செயலணியின் பதவிக்காலம் நீடிக்கப்படமாட்டாது என அதன் தலைவர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.



சிங்கள ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர்,

ஒரே நாடு ஒரே சட்டத்திற்கான பரிந்துரைகளை ஏற்கனவே தயாரித்துள்ளதாகவும், அந்த அறிக்கை விரைவில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.


இந்த ஜனாதிபதி செயலணியானது 2021 ஆம் ஆண்டு ஒக்டோபர் 26 ஆம் திகதி ஜனாதிபதியினால் ஸ்தாபிக்கப்பட்டதுடன், இந்த வருடம் பெப்ரவரி 28 ஆம் திகதி மேலும் 03 மாதங்களிற்கு நீடிக்கப்பட்டது. இதன்படி ஒரே நாடு ஒரே சட்டம் என்ற ஜனாதிபதி செயலணியின் பதவிக்காலம் இன்று நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# 13,200 லீற்றர் பெற்றோலுடன் தடம்புரண்ட எரிபொருள் தாங்கி

(கொழும்பு)

கொழும்பிலிருந்து எரிபொருள் ஏற்றிச் சென்ற எரிபொருள் தாங்கி ஒன்று தடம் புரண்டு விபத்திற்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு விபத்து ஏற்படும்போது தாங்கியில் 13,200 லீற்றர் பெற்றோல் இருந்துள்ளதுடன் பெருமளவிலான எரிபொருள் இதன்போது கசிந்து வீணாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,



கொழும்பில் இருந்து கிண்ணியா நோக்கி எரிபொருளை ஏற்றிக் கொண்டு சென்ற எரிபொருள் தாங்கியே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது. விபத்து தொடர்பில் குருநாகல் தீயணைப்புப் பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்திற்கு உடனடியாக விரைந்த தீயணைப்புப் பிரிவினரின் பெரும் முயற்சியின் பின்னர் எரிபொருள் தாங்கி மீண்டும் வீதிக்கு கொண்டு வரப்பட்டது.

இது தொடர்பில் குருநாகல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (நி-6)

## மீண்டும் இயங்கவுள்ள சப்புகஸ்கந்த

(கொழும்பு)

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மீண்டும் இயங்கவுள்ளதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். கப்பல் ஒன்றிலிருந்து மசகு எண்ணெய் இறக்கும் நடவடிக்கை நேற்று நடைபெறறது. அத்துடன் சப்பு கஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மீண்டும் இயங்கவுள்ளதாகவும்,கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதியின் பின்னர் அந்நிலையம் முதல் தடவையாக இயங்கவுள்ளதாகவும் அமைச்சர் காஞ்சன விஜேசேகர மேலும் தெரிவித்துள்ளார். 6 நாட்களில் சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் எரிபொருட்களை உற்பத்தி செய்ய ஆரம்பிக்கும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (நி-6)

# புகையிரத சேவையை அதிகரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

"நாட்டின் நெருக்கடி நிலையை கருத்தில் கொண்டு சேவையில் ஈடுபடும் புகையிரதங்களை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என புகையிரத திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய தற்போது சேவையிலுள்ள புகையிரதங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், புகையிரதங்களில் இணைக்கப்பட்டுள்ள பெட்டிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது. பேருந்து கட்டண உயர்வை தொடர்ந்து புகையிரதங்களில் பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருவதனால் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக புகையிரத பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்துள்ளார். (நி-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 220 | 300 | 350 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 220 | 240 |
| பச்சைமிளகாய் | 300 | 350 | 330 | 400 |
| தக்காளி | 800 | 700 | 600 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 180 | 130 | 120 |
| கோவா | 230 | 220 | 220 | 260 |
| கரட் | 180 | 330 | 330 | 400 |
| பூசணி | 120 | 120 | 100 | 120 |
| புடோல் | 230 | 240 | 220 | 300 |
| வாழைக்காய் | 50 | 50 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 400 | 400 | 150-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 200 | 210 | 200 | 240 |
| பாகற்காய் | 650 | 700 | 800 | 600 |
| வெண்டக்காய் | 160 | 160 | 150 | 320 |
| கருணைக் கிழங்கு | 160 | 220 | 150 | 200 |
| பயற்றங்காய் | 200 | 300 | 240 | 600 |
| லீக்ஸ் | 200 | 250 | 230 | 160 |
| பீற்றூட் | 350 | 400 | -- | 400 |
| கறிமிளகாய் | 400 | 700 | -- | 500 |
| முருங்கைக்காய் | 1200 | 1800 | 1400 | 1200 |
| போஞ்சி | 450 | 700 | -- | 600 |
| கத்தரிதம்புள்ள | 280 | 200 | -- | 320 |
| கீரை - 1 பிடி | 50 | 50 | 100 | 120 |
| தேசிக்காய் | 600 | 500 | 450 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 75 | 40-60 | 60-80 |
| இராசவள்ளி | 200 | 250 | 200 | 140 |
| வெங்காயப்பூ | -- | -- | -- | -- |
| முள்ளங்கி | 120 | 180 | -- | 280 |
| பொன்னாங்கண்ணி | 60 | 80 | 100 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 40 | 40 |
| ஈரப்பலா | 80 | -- | -- | 150 |

# இரண்டு ஆண்டுகளில் தலைகீழாக மாறிய இலங்கை

## சரத் பொன்சேகா தெரிவிப்பு



(கொழும்பு)

இரண்டே ஆண்டுகளில் இலங்கையின் பொருளாதாரம் தலைகீழாக மாறியதாக பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மாஸ்டர் சரத் பொன்சேகா தகவல் வெளியிட்டுள்ளார்.

முகப் புத்தகத்தில் அவர் வெளியிட்டுள்ள புள்ளி விபரங்களில் இந்த தகவல் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 2019 ஆம் ஆண்டு இலங்கையில் காணப்பட்ட பொருளாதார நிலை தற்போது படுபாதாளத்திற்குள் விழுந்துள்ளது. அதற்கமைய, 2019 பாண் 50 ரூபாயில் காணப்பட்டது. ஆனால் தற்போது 180 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

2019 ஆம் ஆண்டில் எரிவாயு சிலிண்டர் ஒன்று 1350 ரூபாய், ஒரு மூட்டை சீமெந்து 850 ரூபாய், ஒரு லீற்றர் டீசல் 120 ரூபாய், ஒரு லீற்றர் பெற்றோல் 140 ரூபாய், குறைந்தபட்ச பேருந்து கட்டணம் 12 ரூபாய்க்கு காணப்பட்டது.

அப்படி என்றால் இது 74 வருட பிரச்சினை அல்ல. 2019 ஆம் ஆண்டு ஊடகத்தில் பிரபல கதாபாத்திரமாக இருந்தவருக்கு அடையாளமிட்டதன் முட்டாள் தனத்தினால் ஏற்பட்ட ஒரு பிரச்சினையாகும்" என அவர் தனது பதிவில் பதிவிட்டுள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## குமரனின் கனவு



(நேற்றைய தொடச்சி)

அத்தலைவனும் "ஓ! போரில் ஆயிரக் கணக்கில் வீரர்களைக் கொன்று வெற்றியடையச் செய்த மாவீரர் குமரசிம்மரா தாங்கள்? வாருங்கள் நானே தங்களை மன்னனிடம் அழைத்துச் செல்கிறேன்" எனக் கூறி அழைத்துச் சென்றான்.

தர்பாரில் மன்னனோடு இளவரசியும் இருந்தாள். குமரன் அவளைக் கண்டதும் கனவில் தான் கண்ட ராணி போல இருப்பதைப் பார்த்தான். அதனால் தன் கனவு கண்டிப்பாகப் பலிக்கப் போகிறது என்று எண்ணினான்.

அவனைக் கண்ட மன்னன் "உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டான். அப்போது அவன் தன்னிடமுள்ள தலைப் பாகை, குத்துவாள் ஆகிய இரண்டின் சக்தி பற்றி மன்னனிடம் கூறினான். தான் ஒரு மாவீரன் என்றும் சொன்னான். உலகையே வென்று அந்த மன்னனுக்குக் கொடுப்பதாகவும் கூறினான்.

அதைக் கேட்ட மன்னன் மகிழ்ந்து "முதலில் என் எதிரி மாளுவ நாட்டு மன்னனை வென்று வா பார்க்கலாம்" என்றான். குமரனும் "நான்" அவனை வென்று வருகிறேன். அதற்குப் பின் இளவரசியை எனக்கு மணம் செய்து வைக்க வேண்டும்" என்றான் சற்றும் தயங்காமல். மன்னனும் சிரித்தவாறே அதற்கு இணங்கினான். பலசாலியான மாளுவ மன்னனை வென்று விட்ட வீரனுக்கு தாராளமாக இளவரசியை மணம் செய்து வைக்கலாமே!

குமரன் சில வீரர்களோடு மாளுவ மன்னனுடன் போர் புரியச் சென்றான். மாளுவ மன்னன் ஆச்சரியப்பட்டான். ஏனெனில் மாணிக்கபுரி மன்னன் அவனிடம் அதுவரை பயந்து கொண்டிருந்தான். ஆனால் இப்போது திடீரென அவன் தாக்குதலை ஆரம்பித்திருக்கிறான் என்றால் அதற்கு ஏதோ காரணம் இருக்கவே இருக்கும் என்று நினைத்தான். போர் பாகையை உபயோகித்து அம்புகளை எய்தும் குத்துவாளைக் குத்தி நூற்றுக்கணக்கான வீரர்களை வரவழைத்தும் போர் புரிந்து மாளுவ மன்னனின் படையை அழித்து அவனைப் புற முதுகு காட்டி ஓடச் செய்தான். வெற்றி பெற்று வந்த குமரனை மன்னன் மரியாதைகளுடன் வரவேற்று "எனக்கு நான் விரும்பியபடி மாப்பிள்ளை கிடைத்தாகி விட்டது. என் மகளைக் குமரனுக்கு மணம் செய்து வைக்கிறேன். இவனுக்குப் பட்டாபிஷேகம் செய்து என் நாட்டையும் இந்த மாவீரனுக்கே கொடுக்கிறேன்" என்றான். இளவரசியும் குமரனை அப்போது தான் கவனித்தாள், குமரனோ அவளைப் பார்த்தவாறே இருந்தான். இளைஞனும் வீரனுமான அவன் தனக்கு ஏற்ற கணவன் என எண்ணி அவள் மகிழ்ந்தாள்.

குமரனுக்கும் இளவரசிக்கும் திருமணம் விமரிசையாக நடைபெற்றது. அதன் பின் பட்டாபிஷேகமும் நடக்க குமரன் அந்நாட்டின் மன்னாகி விட்டான்.

அவன் கனவு பலித்தே விட்டது. அவன் மன்னனுமாகி ராணியையும் அடைந்து விட்டான். மாவீரனை மணந்ததால் இளவரசியும் மகிழ்ச்சியே அடைந்தாள்.

(முற்றும்)

# கம்பராமாயணம்

## சுந்தர காண்டம்

114



கழுகின் வேந்தனாகிய தொழத்தக்க சம்பாதி என்பான் சொன்ன உறுதி மொழி அவனுக்கு நம்பிக்கை அளித்தது. 'இலங்கையில் தான் அந்த ஏந்திழையாள் சிறை வைக்கப் பட்டிருக்கிறாள்' என்று கூறியதில் தவறு இருக்காது என்ற முடிவுக்கு வந்தான்.

பாய்ந்து ஓடும் அவன் கால்கள் மரங்களையும் மாட மாளிகைகளையும் தாவின. புள்ளினம் பறந்து திரிவதும் பூக்கள் நிறைந்ததுமாகிய சோலை ஒன்று காணப்பட்டது. காக்கை திரியும் தோற்றம் கண்டு, அவன் சோகம் தீர்க்கும் அசோக வனத்தைக் கண்டான்.

**சீதையைக் காணல்**

இருளிடை ஒளிவிடும் மின் என, அரக்கியர் சூழ்ந்திருந்த இடத்தில் கவலையில் ஆழ்ந்த நங்கையைக் கண்டான். அதனைக் கண்டு தேவர் ஆரவாரித்தனர். வெற்றி வாசல் வழி திறந்து காட்டியது.

இராமன் அறிவித்த பேரழகு முழுவதும் எங்கும் பெயராது அங்கு குடியி[illegible]யைக் கண்டான். சித்திரத்தில் தீட்டிய அழகு வடிவத்தைச் சிந்தனை முகத்தில் தேக்கிய வடிவத்தில் கண்டான். புகையுண்ட ஓவியமாக அவள் காணப்பட்டாள்.

**'ஆவியந்துகில் புனைவது ஒன்று அன்றி**
**வேறு அறியாள்**
**தூவி அன்னமென்**
**[illegible] தோய்கிலா மெய்யாள்**
**தேவு தெண்கடல்**
**அமிழ்துகொண்டு**
**அனங்கவேள் செய்த**
**ஓவியம் புகை உண்டதே ஒதுக்கின்ற உருவாள்"**

அரக்கியர் மத்தியில் அவள் நொடிந்து இருந்தது, கற்களிடையே உணங்கிய மருந்துச் செடி போல இருந்தது.

**"வன்மருங்குல்வாள்**
**அரக்கியர் நெருக்க**
**அங்கு இருந்தாள்**
**கல்மருங்கெழுந்து.**
**என்றும் ஓர்துளிவரக்**
**காணா**
**நன் மருந்துபோல்**
**நலனற உணங்கிய**
**நங்கை,**
**மென் மருங்குல்**
**போல் வேறுள அங்க**
**மும் மெலிந்தாள்".**

புலிக் கூட்டத்திடையே துள்ளி ஓடாத மானைக் கண்டான்; சிந்தனை முகத்தில் தேக்கித் தன்வாழ்வை எண்ணி நிந்தனை செய்து கொண்டிருந்த சீதையைக் கண்டான். அவள் நினைவுகள் பழமைக்குச் சென்று, ஊர்ந்து கொண்டிருந்தன.

**சீதையின்**
**நினைவுகள்**

"ஆட்சி இல்லை" என்றபோது நிலை கலங்காத அவனது பேராண்மை அவளுக்குப் பெருமிதம் தந்தது.

**"மெய்த்திருப்பதம்**
**மேவு என்ற போதினும்**
**இத்திருத்துறந் 'து'**
**ஏகென்ற போதினும்**
**சித்திரத்தின் அலர்**
**ந்தசெந் தாமரை**
**ஒத்திருக்கும் முகத்**
**தினை உன்னுவாள்."**

"வில்லை முறித்து வீரம் விளைவித்துத் தன்னை மணந்து கொண்ட வெற்றியை' நினைவில் கொண்டு வந்து நிறுத்தினாள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருக்கும் உதவி செய்யாதவர்கள் பிறர் உதவியை எதிர்பார்க்க முடியாது.
– சீசர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நான், நீ என்றால் உதடுகளும் ஒட்டா

கலைஞர் கருணாநிதியின் பேச்சாற்றல் அவரின் ஆயுட்காலம் வரை அவரை அரசியல் தலைவராகப் பிரகடனப்படுத்தியது.

சமயோசிதமாகப் பேசக்கூடிய கலைஞர் கருணாநிதியின் பேச்சைக் கேட்பதற்காகவே மக்கள் கூட்டம் பெருகும்.

ஒருமுறை கூட்டமொன்றில் உரையாற்றிய கலைஞர்; நான், நீ என்றால் உதடுகளும் ஒட்டா. நாம் என்றாலேயே உதடுகள் ஒட்டும் என்றார்.

உண்மை, நான், நீ, என்ற செருக்கு ஒற்றுமைக்குப் பகை.

இதேபோல இது எனது நாடு, இந்த நாடு என்னுடையது என்றாலும் உதடுகள் ஒற்றுமைப்பட்டுக் கொள்ளமாட்டா.

மாறாக எமது நாடு, எம் நாடு என்றால் உதடுகளும் ஒற்றுமைப்படும்.

ஆக, எனது, என்னுடையது என்று உரிமை கொண்டாட முற்படும்போது உதடுகளே ஒட்ட மறுக்கையில், இலங்கை சிங்களவர்களுக்குரிய நாடு என்று மார்தட்டினால், இங்கு எங்ஙனம் இன ஒற்றுமை ஏற்பட முடியும்.

ஆம், இந்த நாட்டின் உரிமையை சிங்களவர்களுக்குரியதாக ஆக்க முற்பட்டதனால், ஏற்பட்ட கெடுதி என்ன என்பதை சிங்கள மக்களும் சிங்கள ஆட்சியாளர்களும் நன்கு புரிந்துகொள்ள வேண்டும்.

இலங்கையின் இன்றைய நிலைமை எவ்வாறாக உள்ளதென்பதை நாம்கூறி யாரும் தெரிந்து கொள்ள வேண்டிய தேவை இல்லை.

பொருளாதாரப் பெரும் பஞ்சத்துக்கு மக்கள் ஆளாகப் போகின்றனர். எந்தவகையிலும் நாட்டை மீட்க முடியாது என்ற கந்தறு நிலையில் பேரினவாத ஆட்சியாளர்கள் உலக நாடுகளிடம் பிச்சை கேட்கின்றனர்.

எனினும் இன அழிப்புச் செய்த ஆட்சியாளர்களின் கோரிக்கையை செவிமடுக்க முடியாதென்பது போல வெளிநாடுகளும் உலக வங்கியும் உதவி செய்ய மறுத்து வருகின்றன.

எப்படி இருக்கிறது நிலைமை என்பதை சிங்கள மக்களே ஒருகணம் சிந்தித்துப் பாருங்கள்.

இலங்கை பெளத்த சிங்கள நாடு. இங்கு தமிழர்கள் வந்தேறு குடிகள். விரும்பினால் அவர்கள் இங்கு இருக்கலாம்.

ஆனால் சிங்களவர்களே ஆளுவர். பெளத்தம் ஆட்சி மதம் என்று மார்தட்டிய காலத்தை ஒருக்கால் திரும்பிப் பாருங்கள்.

அதோ! தமிழ் மக்களைக் கொன்றொழித்த கொடுமைகள் கொட்டிக் கிடக்கின்றன. அவை உங்கள் பார்வைக்கு நிச்சயம் தெரியும்.

ஆம், இலங்கை எமது நாடு என்று உரைத்திருப்போமாயின், இந்த நாட்டில் பஞ்சம், பசி, பட்டினிக்கு ஏது இடம்.

என்ன செய்வது பேரினவாதத் தீயை அரசியல் முதலீடாகக் கொண்ட கொடியவர்களால் அப்பாவித் தமிழ் மக்கள் கண்ணீரும் கம்பலையுமாய் வாழ, நாடும் கந்தறுந்து இனி மீள முடியாது என்ற நிலைமைக்கு ஆளாகிற்று.

## வீட்டில் உறக்கத்தில் இருந்தவர்களின் 91/4 பவுண் தங்கச் சங்கிலி அறுப்பு

### துன்னாலை கிழக்கில் சம்பவம்

(கரணவாய்)

வீட்டில் உறக்கத்தில் இருந்தவர்களின் 9 1/4 பவுண் தங்கச் சங்கிலி அறுத்துச் செல்லப்பட்டுள்ளதாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை நள்ளிரவு துன்னாலை கிழக்கு பகுதியில் உள்ள வீடு ஒன்றில் வீட்டின் கதவு திறந்திருந்ததை சாதகமாகப் பயன்படுத்தி படுத்திருந்த இருவரின் தங்கச் சங்கிலி அறுத்துச் செல்லப்பட்டுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஒன்று 5 3/4 பவுணும் மற்றையது 3 1/2 பவுண் தங்கச் சங்கிலியும் என முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,60)

## வவுனியாவில் வயோதிப பெண்ணிற்கு மயக்க மருந்து கொடுத்து நகை அபகரிப்பு

### யாழை சேர்ந்த 21 வயது பெண் கைது

(வவுனியா)

வவுனியாவில் பெண் ஒருவருக்கு மயக்க மருந்து கொடுத்து நகைகளை திருடிய சம்பவம் தொடர்பில் 21 வயது பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் நேற்று தெரிவித்துள்ளனர்.

வவுனியா, பண்டாரிக்குளம் நாவலர் வீதியில் வசிக்கும் வயோதிப பெண் ஒருவர் சுகயீனம் காரணமாக கடந்த புதன்கிழமை மருந்து எடுப்பதற்காக வவுனியா வைத்தியசாலைக்கு சென்றுள்ளார். மருந்து எடுத்துவிட்டு குறித்த வயோதிப பெண் வைத்தியசாலையில் சிறிது இளைப்பாறி இருந்தபோது அங்கு வந்த யுவதி ஒருவர் குறித்த வயோதிப பெண்ணுடன் நீண்ட நேரமாக அனுதாபமாக உரையாடி வயோதிப பெண் தொடர்பான தகவல்களை பெற்றுள்ளார்.

உடல் சுகயீனம் என்பதால் தனியாக வீட்டிற்கு செல்ல வேண்டாம் எனத் தெரிவித்த அந்த யுவதி முச்சக்கர வண்டி ஒன்றில் வயோதிப பெண்ணின் வீட்டிற்கு அழைத்து சென்றதுடன் மயக்க மருந்து கலந்த சோடாவையும் பருகக் கொடுத்துள்ளார். வீட்டிற்கு சென்று சிறிது நேரத்தில் வயோதிப பெண் மயக்கமடைந்ததும், அவர் அணிந்திருந்த சங்கிலி, மோதிரம் மற்றும் வீட்டில் இருந்த நகைகள் என 7 1/2 பவுண் நகையை திருடிக் கொண்டு அங்கிருந்து தப்பியோடியுள்ளார்.

மயக்கம் தெளிந்து குறித்த வயோதிப பெண் எழும்பியதும் நகைகள் திருட்டு போனதை அறிந்து கொண்டு உடனடியாக வவுனியா குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். பொலிஸ் குழுவினர் தீவிர விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது, வவுனியா, மதீனாநகரில் வசித்து வந்த யாழ். பண்டத்தரிப்பு பகுதியைச் சேர்ந்த 21 வயது பெண் ஒருவரை கைது செய்துள்ளனர். திருடப்பட்ட நகையில் 4 அரைப் பவுண் நகை குறித்த யுவதியிடம் இருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளின் பின் குறித்த யுவதியை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

## கரவெட்டியில் வீட்டில் இருந்த பொருட்களுக்கு தீ வைப்பு

### பொலிஸில் முறைப்பாடு

(கரணவாய்)

கரவெட்டி இராஜகிராமத்தில் வீட்டில் இருந்த பொருட்களுக்கு தீ வைக்கப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை வீட்டில் இருந்த பெரியவர்கள் வெளியே சென்றதாகவும் சிறுவர்களே வீட்டிலிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வெளியில் சென்ற பெரியவர்கள் மீண்டும் வீட்டுக்கு வந்தபோது வீட்டில் இருந்த சோபா செற்றி, மின்விசிறி, தொலைக்காட்சி பெட்டி என்பன தீயில் எரிந்து காணப்பட்டன.

இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

வீட்டிற்கு இனந்தெரியாத நபர்கள் தீ வைத்தார்களா அல்லது வீட்டில் இருந்த சிறுவர்கள் தீ மூட்டினார்களா என்பது தொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,60)

## இராஜகிராமத்தில் கோஷ்டி மோதல் கைதான சந்தேகநபர்கள் 31 ஆம் திகதி வரை மறியலில்

(கரணவாய்)

கோஷ்டி மோதல் சம்பவத்தில் ஈடுபட்ட 7 சந்தேகநபர்களையும் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் பொன்னுத்துரை கிருஷந்தன் உத்தரவிட்டார்.

கடந்த 25ஆம் திகதி கரவெட்டி இராஜகிராமம் பகுதியில் இரு சாராருக்கிடையில் கோஷ்டி மோதல் ஒன்று ஏற்பட்டதாகவும் இதில் இரண்டு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் வரையிலான சொத்து இழப்பு ஏற்பட்டிருப்பதாகவும் நெல்லியடி பொலிஸில் முறையிடப்பட்டிருந்தது.

இது தொடர்பாக விசாரணைகளை • மேற்கொண்ட நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட ஏழு பேர் நேற்று வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்தியபோதே அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (ம-7,60)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



### இறை இன்பத்தை அனுபவிக்க

❖ வெற்று ஏட்டுக்கல்வியின் துணையோடு இருளில் உழன்று கொண்டிருக்கும் அலைச்சல்கள் இல்லை. அங்கே அவன் இறையனுபூதி என்னும் ஒளியை நேரே தரிசிக்கின்றான். அதன்பிறகு அவன் காரணம் தேடி அலைவதில்லை. பெரும்பாலும் அவன் இறைக்காட்சியை கண்டுவிட்டவனாகக் காணப்படுகின்றான்.

❖ உண்மையை உணர்ந்து கொண்டதால் விவாதிப்பதில்லை. இறைவனைக் கண்டுகொள்வதும், அவனை உணர்வதும் இறையின்பத்தை அனுபவிப்பதுமாகிய இந்த நிலை [illegible] அடையக் கூடிய மிகப் பெரும் பயன் இதைவிட வேறென்ன இருக்க முடியும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினிச் சாவை நோக்கி வேகமாக நகரும் இலங்கை

இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்து எக்காலத்திலும் சந்தித்திராத பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. ஒவ்வொரு நாளும் விடியும்போது முன்னைய நாளைவிட மோசமான நாளாகவுள்ளது. குடிமக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை விநியோகிக்க அரசாங்கம் திண்டாடுகிறது. நாட்டின் நிலைமை பேசுவதற்கு கனமாயிருக்கிறது. ஆசீர்வாதங்கள் சாபமாக மாறியுள்ளன. பொருண்மிய கோரிக்கைகள் அரசியல் கோரிக்கைகளாக வடிவமெடுத்து பெரும் புரட்சியை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. இவற்றை தணிப்பதற்கு ஆட்சியாளரால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் இன்றைவரை தோல்வியடைந்து ஆயுத பிரயோகமும்- இரத்தக்களறி ஏற்படுமோ என்ற அச்சநிலை மக்களை ஆட்கொண்டுள்ளது.

நாட்டில் ஒருவருட பணவீக்கம் 119 வீதத்தைத் தாண்டியுள்ளதாக அறிக்கைகள் காட்டுகின்றன. உலகில் அதிக பணவீக்கமுள்ள நாடுகளில் மூன்றாம் இடத்தில் உள்ளது. சிம்பாவே மற்றும் லெபனான் நாடுகளுக்கு அடுத்ததாக இலங்கை வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. முன்னர் ஆறாவது இடத்தில் இருந்தது. இலங்கை நாணயத்தின் பெறுமதி தொடர்ந்து வீழ்ச்சியடைந்து செல்கிறது. இவ்வருட இறுதியில் டொலர் 500 ரூபாவை எட்டும் என இலங்கையின் முன்னாள் கணக்காய்வாளர் நாயகம் காமினி விஜேசிங்கே எச்சரிக்கை விடுத்துள்ளார். அத்தியாவசியப் பொருட்களுக்கான விலைகள் நாளாந்தம் உயர்ந்து செல்கிறது. இதன்மூலம் மக்கள் நாளாந்தம் வறுமைக் கோட்டிற்குக்கீழ் தள்ளப்படுகின்றனர். மொத்த சனத்தொகையில் 60 வீதமானோர் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்வதாக கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன. கடந்த வருடம் அரச செலவீனம் வருமானத்தின் இருமடங்காகியுள்ளது. அத்தோடு மொத்தக்கடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் இருமடங்காகியுள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்திற்கு பற்றாக்குறை ஏன் ஏற்பட்டது என்பதற்கு ஆட்சியாளரின் போதிய முன்னுணர்வற்ற பொருளாதாரச் செயற்பாடுகள். ஊழல். பொருளாதார தீர்மானங்களில் அரசியல் அபிலாசைகள் செல்வாக்குச் செலுத்தியமை. அதிகாரிகளின் தவறான நடத்தை உள்ளிட்ட பல காரணங்கள் கூறப்படுகின்றன. "அதிகாரிகளின் திறமையற்ற செயற்பாடும் ஊழல். மோசடிகளுமே தற்போதைய பொருளாதார சிக்கலுக்குக் காரணம்" என அயல் நாட்டு ஆட்சிப்பீடத்தினர் விமர்சனம் செய்திருந்தனர். "உலகிலேயே அரசியல்வாதிகள் கொள்ளையடிப்பதற்கு வாய்ப்புக் கொடுக்கும் அரசியல் அமைப்புச்சட்டம் இருக்கும் நாடு இலங்கையாகும்" என இலங்கையின் முன்னாள் கணக்காய்வாளர் நாயகம் காமினி விஜேசிங்கே கண்டனம் செய்துள்ளதையும் பார்த்திருக்கின்றோம்.

இந்த பின்னணியில் நொந்து போயுள்ள பொருளாதாரத்தால் மக்கள் பாதிக்கப்பட்ட நிலையில் மக்கள் மத்தியில் குறைந்துவரும் அபிப்பிராயத்தை மீட்டெடுக்க அரசாங்கம் வட்டி வீதத்தைக் குறைத்ததோடு வரிவிதிப்பையும் குறைத்தது. இதன்மூலம் பொருட்களுக்கான விலை குறையும் என்றும் மக்கள் மத்தியில் அரசிற்கெதிரான எதிர்ப்பலையைக் கட்டுப்படுத்த முடியும் என்றும் ஆட்சியாளர்கள் நம்பினர். ஆனால் ஆட்சியாளர் எதிர்பார்த்ததைவிட இதன் தாக்கம் பொருளாதாரத்திற்கும் ஆட்சியாளருக்கும் பாதகமான விளைவையே கொடுத்தது.

வரிவிதிப்பைக் குறைத்ததன் மூலம் அரச வருவாய் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. அரசாங்க செலவீனத்திற்கு - மூலதனச் செலவீனம் - மீண்டெழும் செலவீனங்களுக்கு பணம் இல்லாமல் திண்டாடியது. இந்நிலையில்தான் நாணயத்தாள்களை அச்சடிக்க வேண்டிய நிர்ப்பந்தச் சூழல் அரசாங்கத்திற்கு ஏற்பட்டது.

கோட்டாபய ஆட்சிப்பீடம் ஏறிய பின்னர் மூன்று இலட்சம் கோடி ரூபாய் நாணயத்தாள்கள் அச்சடிக்கப்பட்டதாகவும் இது இலங்கையின் பண நிரம்பலில் 42 சதவீத அதிகரிப்பைக் காட்டியுள்ளதாகவும் அறிக்கைகள் வெளிப்படுத்தியுள்ளன. இவ் அதிகரித்த பண நிரம்பலுக்கேற்ப உற்பத்தி அதிகரிக்கப்படாவிட்டால், பொது விலை மட்டம் உயர்வு-பணவீக்கம் உயர்வு தவிர்க்க முடியாததாகும்.

நாணயத்தாள்கள் அச்சடிக்கும் விவகாரத்தில் சில உயர் அதிகாரிகள் தமது புலமைசார் செயற்பாட்டை விடுத்து ஆட்சியாளரின் செல்வாக்கிற்குட்பட்டு தீர்மானம் எடுத்துள்ளதையும் காண முடிகிறது. "நாணயத்தாள்கள் அச்சடிப்பதற்கும் பணவீக்கத்திற்கும் தொடர்பில்லை" என மத்திய வங்கியின் ஆளுநராக பதவிவகித்த அஜித் நிவாட் கப்ரால் அண்மையில் கூறியிருந்தார். இதன் பொருளாதாரத் தாக்கத்தைப் பொறுத்து இது ஆபத்தான கருத்தாகும். பண நிரம்பல் அதிகரித்தால் பண வீக்கம் அதிகரிக்கும் என்பது சாதாரண விதி.

பொதுவாக ஒரு நாட்டின் பண நிரம்பலானது மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு நிகராகவே பேணப்படும். நாணயச் சபையானது இதன் மீதான கட்டுப்பாட்டை சுயாதீனமாகக் கொண்டிருக்கும். அத்தோடு நாணயச் சந்தையில் நாணயத்தை மிதக்கவிட்டு சந்தைச் சக்திகளால் நாணயத்தின் பெறுமதி தீர்மானிக்கப்பட வேண்டும். இந்த நடைமுறைக்கு மாறாக ஆட்சியாளரின் தேவைக்கேற்ப டொலருக்கெதிரான ரூபாவின் பெறுமதியை அதிகாரிகள் குறைத்து மதிப்பிட்டனர். இது கள்ளச்சந்தையில் டொலருக்கான விலையை அதிகரிக்கச் செய்தது. இதனால் வெளிநாடுகளிலிருந்து உள்நாட்டிற்கான பணப்பரிமாற்றங்கள் வங்கி ஊடாக நடைபெறுவதற்கு மாறாக தனியார் மூலமான உண்டியல் முறை முக்கியம் பெற்றது. இதனால் அரசாங்கம் தீர்மானித்த பெறுமதியில் இறக்குமதிக்கான டொலரைக் கொடுக்க வங்கிகளால் முடியாமல் போனது. இது கள்ளச் சந்தை செயற்பாட்டை ஊக்கப்படுத்தியது. கள்ளச் சந்தையில் டொலரைப்பெற நிர்ப்பந்திக்கப்பட்டனர். இதன் தொடர்ச்சியான செயற்பாடு டொலரின் பெறுமதி கட்டுப்பாட்டை மீறி உயர்வடைந்து வருகிறது.


நாணயத்தாள்களை அச்சடித்ததன் மூலம் பண நிரம்பல் அதிகரித்துள்ள நிலையில் உற்பத்தித் துறைகள் பாதிப்படைந்து பொருள் உற்பத்தி குறைவடைவதானது அத்தியாவசியப் பொருட்களுக்கான விலைகளை பல மடங்காக அதிகரிக்கச் செய்தது. இது தற்போது அரசாங்கத்தின் கட்டுப்பாட்டை மீறிச்சென்று கொண்டிருக்கும் தீவிர நிலையை ஏற்படுத்தியுள்ளது.

டொலரின் பெறுமதி தொடர்ந்து அதிகரித்துச் செல்வதானது ஏற்றுமதித் துறையில் குறிப்பிட்ட வருமானத்திற்காக முன்னர் செய்த செலவைவிட தற்போது கூடுதலாக செலவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இது ஏற்றுமதி வருமானத்தை குறைவடையச் செய்துள்ளது. அதுமட்டுமல்ல இறக்குமதிக்கான செலவீனத்தை அதிகரித்துள்ளது. இதனால் இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலைகளையும் அதிகரித்த அதேவேளை குறையையும் ஏற்படுத்தியுள்ளது.

பொருளாதார பின்னடைவு ஸ்திரமற்ற ஆட்சி ஆகியவற்றால் பங்குச்சந்தையும் பரிவர்த்தனையில் பாரிய வீழ்ச்சிப் போக்கைக் காட்டி நிற்கிறது. இதனால் பங்குச்சந்தை அடிக்கடி இடை நிறுத்தப்படுகிறது. இது முதலீட்டாளருக்கு அவநம்பிக்கையை ஏற்படுத்தி புதிய முதலீட்டுக்கான வாய்ப்புக்களை தவறவிடப்படுகின்றன.

இரசாயனப் பாவனையை நிறுத்துவதாகக்கூறி உர இறக்குமதியை நிறுத்திய அரசாங்கம் இரசாயன உரத்தைப் பாவித்து உற்பத்தி செய்யப்பட்ட அரிசியை இறக்குமதி செய்ய வேண்டி நிர்ப்பந்திக்கப்பட்டது. இது அரசின் பொருளாதாரத் திட்டமிடலுக்குக் கிடைத்த பாரிய தோல்வியாகும். இது உணவுப் பற்றாக்குறையை மேலும் தீவிரப்படுத்தியது. எரிபொருளின் விலை அதிகரித்தமையானது மீன்பிடி உள்ளிட்ட ஏனைய உற்பத்தித் துறைகளையும் வெகுவாகப் பாதித்து விலை அதிகரிப்பை மேலும் தீவிரப் படுத்தியது. உற்பத்தியாளருக்கான தேறிய வருமானமும் வீழ்ச்சியடைந்தது.

இலங்கையின் கடன் நிலவரமானது ஆபத்தான கட்டத்தைத் தொட்டுள்ளது. கடன் தீர்ப்பனவு செய்ய முடியாத இயலாமை ஏற்பட்டுள்ளது. இதனால் மீண்டும் கடனைப்பெற முடியாத இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளது. உணவு. எரிபொருள். மருந்து போன்றவற்றைக்கூட இறக்குமதி செய்ய முடியாத கையறு நிலையிலுள்ளது. சர்வதேச இறையாண்மைப் பத்திரங்கள். திபென்சர்கள். திறைசேரி உண்டியல்கள். அபிவிருத்தி முறிகள் நாணயப்பரிமாற்றக் கடன்கள் உள்ளிட்ட பல்வேறுபட்ட கடன்களாக 51 பில்லியன் டொலர் கடன் பாக்கி உள்ளது.



தற்போது இலங்கை மக்கள் ஒவ்வொருவரது தலை மீதும் 10 இலட்சம் ரூபாய் கடன் சுமையுள்ளது. இது 2017 ஆம் ஆண்டில் 5 இலட்சத்து 24 ஆயிரம் ரூபாவாக இருந்துள்ளது. ஆரம்ப காலத்தில் வருமானத்திலிருந்து தீர்ப்பனவு செய்யாமல் மீண்டும் கடனைப் பெற்று கடனையும் வட்டியையும் தீர்ப்பனவு செய்து வந்ததால் தற்போது இந்நிலை ஏற்பட்டுள்ளது. இந்த இக்கட்டான நிலையில் தான் கடன்களை தீர்ப்பனவு செய்ய முடியாத நிலையிலுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. அத்துடன் நின்று விடாது சர்வதேசத்திடம் யாசகம் கேட்டும் இலங்கை மத்திய வங்கி அறிவித்தலொன்றையும் விடுத்துள்ளது.

இந்த ஆபத்தான கட்டத்தில்தான் இலங்கை அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திடம் உதவி கேட்டு சென்றுள்ளது. இது கூட தாமதமான தீர்மானம் என்ற விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. கடந்த மாதம் 18 ஆம் திகதி சர்வதேச நாணய நிதிய அதிகாரிகளுடனான பேச்சுவார்த்தை இடம்பெற்றது. இதன்போது இலங்கை அதிகாரிகள் இரண்டு விதமான கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர். ஒன்று-உலக நாடுகளிடம் ஏற்கனவே இலங்கை பெற்றுக்கொண்ட கடன்களை மறுசீரமைப்புச் செய்தல். இரண்டாவது-அவசர தேவைக்கான உடனடிக் கடன்களை நீண்டகால அடிப்படையில் வழங்குதல்.

சர்வதேச நாணய நிதியம் 1950 ஆம் ஆண்டில் நாடுகளின் சென்மதி நிலுவை சமநிலையைப் பேணுவதற்காகவே உருவாக்கப்பட்டது. அரசாங்கத்தின் தற்போதைய கடன் நிலை அரசாங்கம் தனது கடமையைச் செய்யத் தவறியதால் ஏற்பட்டதாகவே சர்வதேச நாணய நிதியம் கூறுகிறது. கடந்த மாதம் 18 ஆம் திகதி வோஷிங்டனில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின்போது பிரதான கடன் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் வரை உடனடி கடனுதவியாக 4 பில்லியன் டொலர் கோரப்பட்டது. இதற்காக பல சீர்திருத்தங்களை நிபந்தனைகளாக விதித்துள்ளனர்.

(01) இதுவரை வெளிநாட்டுக் கடன்களை பெற்றுக் கொண்டுள்ள நாடுகளுடன் கடன் மறுசீரமைப்பிற்காக ஏற்றுக்கொள்ளக்கூடிய வேலைத்திட்டத்தை உருவாக்க வேண்டும்.

(02) வருமானவரி. வற்வரியை அதிகரிக்க வேண்டும். இதன்மூலம் அரச வருவாய் அதிகரிக்கப்பட வேண்டும்.

(03) நெகிழ்வான நாணயமாற்று வீதத்தை பின்பற்ற வேண்டும்.

(04) அந்நியச்செலாவணி மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டும்.

(05) படுகடனை உறுதித்தன்மையுடன் பேணக்கூடிய திட்டங்கள் முன்வைக்கப்பட வேண்டும்.

(06) மத்திய வங்கியின் சுயாதீனத் தன்மை பேணப்பட வேண்டும்.

(07) பொருளாதார மீள்கட்டுமானத்திற்கான திட்டங்கள் முன்வைக்கப்பட வேண்டும்.

(08) அரசியல் ஸ்திரத்தன்மை பேணப்பட வேண்டும்.

இவற்றில் ஏழு நிபந்தனைகள் அல்லது மறுசீரமைப்புக்கள் பொருளாதாரம் சார்ந்ததாகவும் ஒன்று மட்டும் அரசியல் சார்ந்ததாகவும் அமைந்துள்ளது. இந்த ஏழு பொருளாதாரம் சார்ந்த மறுசீரமைப்புக்களின் செயற்பாட்டுத்திறன் ஒரே ஒரு அரசியல் நிபந்தனையிலேயே தங்கியுள்ளது. இதை இலங்கை நிதி அமைச்சரும் உறுதிப்படுத்தியுள்ளார். நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மை மேலும் மோசமடைந்து செல்கிறது. அமைதியான போராட்டங்கள் வன்முறை வடிவமெடுத்துள்ளன. சர்வதேச நாணய நிதியம் இதுவரை கடன் ஒப்பந்தங்கள் எவற்றையும் உறுதி செய்திராத நிலையில் மேலும் தாமதமாவதற்கான அறிகுறிகளையே தற்போதைய களநிலவரங்கள் காட்டி நிற்கின்றன.

பொருளாதார மறுசீரமைப்பு என்னும் போது உள்ளூரில் அரச துறைகள் தனியார் மயப்படுத்தப்பட வேண்டும். அதிலும் நட்டத்தில் இயங்கும் துறைகள் முக்கிமாக தனியார் மயப்படுத்தப்பட்டு இலாபத்தில் இயங்க வழிசமைக்கப்பட வேண்டும். மேலும் உள்ளூரில் உற்பத்தி விரிவாக்க செயற்பாடாக வெளிநாட்டு முதலீடுகள் ஊக்கப்படுத்த வேண்டும். இதன்மூலம் அரசாங்க வருவாய் அதிகரிக்கும். வேலைவாய்ப்பு பெருகும். ஏற்றுமதியை பன்முகப்படுத்தி அதிகரிக்க வழி ஏற்படும். அந்நியச்செலாவணி வருமானம் அதகரிக்கும். இதன்மூலம் முதலீடு. உற்பத்தி. வர்த்தகம் அகியவற்றிற்கு சாத்தியமான சூழல் அரசியல்வாதிகளால் ஏற்படுத்தப்பட வேண்டும். அவற்றிற்குச் சாதகமான குறிகாட்டிகள் தற்போது இலங்கையில் பலவீனமான நிலையிலேயே உள்ளன. அவற்றை மாற்றத்திற்குட்படுத்த வேண்டுமாயின் அரசியல் ஸ்திரத்தன்மையே முதன்மையான காரணியாகவுள்ளது. சர்வதேச நிபுணர்கள் உள்ளிட்ட உள்ளூர் நிபுணர்களும் முன்மொழிந்துள்ளனர். ஆட்சியாளரால் மேற்படி மறுசீரமைப்புக்களை உடனடியாக செய்வதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. தற்போதைய கள நிலவரங்களைப் பார்க்கும் போது ஆட்சியாளர் தமக்கேற்பட்டுள்ள அரசியல் ஆபத்துக்களிலிருந்து எவ்வாறு தம்மைப் பாதுகாப்பது என்பது பற்றியே கூடுதலாக சிந்திப்பதாக தெரிகிறது. அரசாங்கத்திற்கெதிரான போராட்டங்கள் தொடரும் இந்நிலையில் இலங்கை அரசாங்கம் மிக வேகமாக தனது வாய்ப்புக்களை அல்லது தருணங்களை இழந்து கொண்டிருக்கிறது. எதிர்காலத்தைப் பார்க்கக்கூடிய இயல்பை ஆட்சியாளர் கொண்டிருப்பதாக தெரியவில்லை. அவர்களின் இந்த தகுதியின்மை நாட்டு மக்களை பட்டினிச்சாவை நோக்கி வேகமாக நகர்த் திக் கொண்டிருக்கிறது.

**கெல்மன்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உடுவிலில்...

எது.

பனடோல் மாத்திரை வழங்கப்பட்டமையால் ஓரளவு சுகம் ஏற்பட்டுள்ளது.

இதன்பின்னர் கடந்த புதன்கிழமை கடுமையான காய்ச்சல் காரணமாக இணுவிலில் அமைந்துள்ள தனியார் மருத்துவ மனைக்குச் சிறுமி அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

அங்கு அவருக்கு மருத்துவ ஆலோசனையுடன் மாத்திரைகள் வழங்கப்பட்டு, வீடு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எனினும், அன்றைய தினம் இரவு சிறுமிக்கு காய்ச்சலும் வாந்தியும் அதிகரித்தமையால் மீண்டும் தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அவரது உடல்நிலையைக் கருத்திற் கொண்டு மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டார்.

இந்நிலையில் குறித்த சிறுமி சிகிச்சை பலனின்றி நேற்று வெள்ளிக்கிழமை காலை உயிரிழந்துள்ளார்.

டெங்குக் காய்ச்சல் காரணமாக சிறுமி உயிரிழந்தார் என மருத்துவ அறிக்கையிடப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ்.மாவட்டத்தில் கடந்த ஒரு வாரத்தில் இரண்டாவது சிறுவர் டெங்குக் காய்ச்சலினால் உயிரிழந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-7,18,33,104)


## அரச ஊழியர்...

திட்டத்தின் ஊடாக பொதுமக்களுக்கான நிவாரணங்கள் அறிவிக்கப்படும் எனவும் பிரதமர் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.
















மேலும், முன்வைக்கப்படவுள்ள இடைக்கால வரவு-செலவு திட்டத்தில் சுகாதாரம் மற்றும் கல்வியை தவிர ஏனைய அனைத்து அமைச்சுக்களுக்கான ஒதுக்கீட்டை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பிரதமர் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம-7)

## ஐக்கிய மக்கள்...

அமைச்சுப் பதவியை ஏற்றுள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சி ஊடாக, எதிர்கால அரசியல் பயணத்தைத் தொடரவும் அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

கரு ஜயசூரியவை தேசியப்பட்டியல் எம்.பியாக்கி, அவருக்குப் பிரதமர் பதவியை வழங்கலாம் என கபீர் ஹாசீம் உள்ளிட்ட சில உறுப்பினர்கள் யோசனை முன்வைத்துள்ளனர்.

இதற்காக தனது தேசியப்பட்டியல் எம்.பி பதவியை விட்டுக்கொடுக்க மயந்த திஸாநாயக்க தயாராகவே இருந்துள்ளார்.

இந்த முயற்சி வெற்றியளிக்காததால் கபீர் ஹாசீம் உள்ளிட்ட தரப்பும் மன முடைந்த நிலையிலேயே காணப்படுகின்றது.

சரத் பொன்சேகா, ராஜித சேனாரத்ன போன்றவர்கள் சஜித்தை தவறாக வழி நடத்துகின்றனர் என மேலும் சில உறுப்பினர்கள், தமது சகாக்களிடம் உள்ளக் குமுறல்களை வெளிப்படுத்தியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

## அமெரிக்க...

இலங்கைக்கான ஐக்கிய அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவை நேற்று வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் சந்தித்தார்.

அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தி தற்போதைய பொருளாதார நெருக்கடியை வெற்றிகொள்ள புதிய பிரதமர் உள்ளிட்ட அரசாங்கத்தினால் முடியும் என தான் நம்புவதாக அவர் இதன்போது குறிப்பிட்டார்.

அதேபோன்று மக்கள் எதிர்பார்க்கும் அரசியல் மறுசீரமைப்புகளை மேற்கொண்டு ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

இலங்கை - ஐக்கிய அமெரிக்க பாராளுமன்ற நட்புறவுச்சங்கத்தின் ஊடாக இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை மேலும் மேம்படுத்த எதிர்பார்ப்பதாகவும் ஜூலி சங் தெரிவித்தார்.

பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியம் மேற்கொள்ளும் பணிகளை பாராட்டிய அவர் பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் அவசியம் குறித்தும் கலந்துரையாடினார். (ம-7)

## வட்டுக்கோட்டை...

உள்ள வீடொன்றில் இவ்வாறு சடலங்கள் கண்டறியப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

77 வயதுடைய திருநாவுக்கரசு புவனேஸ்வரி, மற்றையவர் 75 வயதுடைய விநாயகமூர்த்தி விஜயலக்சுமி என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

ஒருவர் இரண்டு வாரங்களுக்கு முன்பாக உயிரிழந்துள்ளார். மற்றையவர் இரண்டு நாட்களுக்கு முன்னர் உயிரிழந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

இருவர் மட்டுமே அந்த வீட்டில் வசித்து வந்த நிலையில் அவர்களுக்கு உதவி இல்லை என்று விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

மாதாந்த உதவிப் பணம் பெற்றுக் கொள்ளவில்லை என்று கிராம அலுவலர் வீடு தேடிச் சென்றபோதே இருவரும் உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

திடீர் மரண விசாரணை அதிகாரி ஜெ.ஜெயபாலசிங்கம் சம்பவ இடத்துக்கு சென்று சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தார். (ம-7,33)

## சீனி விலை...

அத்துடன், சீனி கிலோ ஒன்றின் சில்லறை விலை 290 ரூபாயிலிருந்து 300 ரூபாயாக அதிகரிக்கப்படவுள்ளதாக சீனி இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (ம-7)

## 21ஆவது...

21ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் ஆலோசனைகளை பெற்றுக் கொள்வதற்கான கட்சித் தலைவர்களின் கூட்டம் நேற்று நடைபெற்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் இந்த கூட்டம் நடைபெற்றது.

பிரதமரின் செயலகத்தில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் மக்கள் விடுதலை முன்னணி தவிர்ந்த ஏனைய கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி, கட்சியின் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவும் கட்சியின் சட்டத்தரணிகளும் கலந்துகொண்டனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகரவும் கட்சியின் சட்டத்தரணிகளும் கலந்துகொண்டனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாட் பதியுதீன், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பழனி திகாம்பரம் உள்ளிட்டோரும் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ, டிலான் பெரேரா, வீரசுமன வீரசிங்க உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் பிரதமர் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டனர்.(ம-7)

## கொள்...

ளாதார நெருக்கடி குறித்து பல்வேறு தரப்பினருடன் விரிவுபடுத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன. எமக்கு உதவி புரிய நாடுகள் உள்ளன. எனினும், சகல தரப்பினரும் ஏற்றுக்கொள்ளும் வகையிலான கொள்கையினை முன்வைத்தால் உலக நாடுகளின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ள முடியும். ஜி7 உட்பட ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் இலங்கையின் கடன் பிரச்சினைக்கு தீர்வுகாண ஒத்துழைப்பு வழங்குவதாக குறிப்பிட்டுள்ளன.

இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு இந்நாடுகள் சீனா, இந்தியா உள்ளிட்ட நாடுகளிடம் வலியுறுத்தியுள்ளன. அத்துடன் உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து ஒத்துழைப்பு பெறுகையில் அதற்கும் ஆதரவு வழங்குவதாக அந்நாடுகள் உறுதியளித்துள்ளன.

ஒத்துழைப்பு வழங்கத் தயார் என சீனாவும் அறிவித்துள்ளது. அதேபோல் இலங்கையில் உள்ள இந்திய நிறுவனங்களின் பிரதானிகளும் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்க தயார் என குறிப்பிட்டுள்ளனர். அத்துடன் இந்திய முதலீடுகளையும் ஊக்குவிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளனர் என்றார். (ம-7)

## கோட்டாபய...

அம்சங்கள் உள்ளடக்கப்படவில்லை.

அமைச்சரவை அனுமதி வழங்காத, 21ஆவது திருத்தச் சட்டமூலம் எதற்காகக் கட்சிகளுக்கு வழங்கப்படுகின்றது. இது காலத்தை இழுத்தடிக்கும் செயலாகும்.


சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நிறைவடையும் வரையே, இந்த நாடகம் நீடிக்கும். அதன்பின்னர் 21ஐக் கைவிட்டு விடுவார்கள்" என்றார். (ம-7)


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு

## யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 115 பரப்பு காணி விற்பனைக்கு

### நிலப்பரப்பு

- A9 வீதியில் இருந்து இரண்டாவது காணி 100m தூரம்
- கைதடி வழி பிள்ளையார் கோயிலில் இருந்து 100 மீற்றர் தூரம்
- பல இந்து ஆலயங்கள் சூழ அமைந்துள்ள காணி. நல்ல சூழல், நல்ல தண்ணீர் நிலம்
- கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம் 300m தூரம்
- இரு வழிப் பாதை
  1. A-9 பாதை
  2. விக்னேஸ்வரா வித்தியாலய வீதி
- கைதடி சந்தி 500m தூரம்
- 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்




**பார்வையிடும் நேரம்**
**காலை 8 மணி முதல்**
**மாலை 6 மணிவரை**

**தரகர் தேவையில்லை**

## விலை

முன் பகுதிகள் ஏழு இலட்சம் (1 பரப்பு)
நடுப் பகுதிகள் ஆறு இலட்சம் (1 பரப்பு)
பின் பகுதிகள் ஐந்து இலட்சம் (1 பரப்பு)

(11641)

**தொடர்பு:- 077 623 4204, 077 288 0152, 076 436 5814**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org